[illegible]
V2 No 9
Sep 1929

N24·2·9.
187135

ஓம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் உ | சுக்கில ஆண்டு புரட்டாசித் திங்கள்<br>1929 ஆம் செப்டம்பர்மீ | இதழ் கூ |
|---|---|---|

உள்ளுறை

தாழ்வெனும் தன்மை ... [illegible]
அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர[illegible] ... [illegible]உச
பெண்ணடியவர் மூவர் ... உஙக
"சைவக் குறும்பு"... ... ... உசரு

OFFICE OF THE REGISTRAR ... 10 OCT 1929

ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—வல்லை. பாலசுப்பிரமணியன், B. A.

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

1929

# சுந்தரர் தேவாரம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தினர் சுந்தரர் தேவாரம் 10,000 பிரதிகளை அச்சிட்டு அடக்க விலைக்கு வழங்குகின்றனர். நேரில் வருவோர் எட்டணா தந்து தனிப்பிரதி பெறலாம். மொத்தமாக ரூபாவுக்கு ஐந்து பிரதிகள் வீதம் பெற்றுக்கொள்ளலாம். முன்பணமாக அனுப்புவோருக்கு 25 பிரதிகட்கு மேற்பட்டால் ரயில்வே பார்சலாகப் புத்தகங்கள் அனுப்பப்படும். முன்பணம் அனுப்புவோர் புத்தகக் கிரயத்தோடு பார்சல் கட்டும் செலவிற்கும் ரயில்வே ரசீதனுப்பத் தபாற் செலவிற்கும் 2 அணா சேர்த்தனுப்ப வேண்டும். ரயில்வே ரசீது கிடைத்தவுடன் பார்சலை ஒப்புக்கொள்ளா விட்டால் ரயில்வே கம்பெனிக்கு டிமரேஜ் கட்டணம் கட்டநேரிடும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தனிப்பிரதி (பார்சல் செலவு, வி. பி. அல்லது ரிஜிஸ்தர் செலவுள்பட) | | | ரூ. | 0 | 8 | 0 |
| 5 பிரதிகள் | ஷை | ஷை | ,, | 1 | 9 | 0 |
| 10 ,, | ஷை | ஷை | ,, | 2 | 15 | 0 |
| 25 ,, | ஷை | ஷை | ,, | 6 | 14 | 0 |
| 50 ,, | ஷை | ஷை | ,, | 13 | 8 | 0 |

ஷை ஐம்பது பிரதிகளைத் திருநெல்வேலிக்கு ரயில்வே பார்சலில் அனுப்ப மொத்தச் செலவு 11-2-0. ரயில்வே ஸ்டேஷனில்லாத உள்நாட்டு ஊர்களிலிருப்போர் ரயில்வே ஸ்டேஷனுக் கருகிலுள்ள நண்பர் விலாசத்துக்கு அனுப்பும்படி செய்தல் நலம். மூன்று நான்கு அன்பர்கள் சேர்ந்து ஒரே பார்சலாகப் பெற்றுக்கொள்வதும் நலம். இப்பிரதிகள் வெளிவந்து ஒரு மாதமாயிற்று. இதற்குள் நாலாயிரம் பிரதிகள் செலவாய் விட்டன. ஆகவே புத்தகம் தேவையுள்ளவர்கள் விரைந்து கீழ்வரும் விலாசத்துக்கு முன்பணம் அனுப்புவார்களாக.

150, கோவிந்தப்ப நாயக்கன் தெரு,<br>சென்னை, 10-9-29.

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார்,<br>காரியதரிசி, சைவசித்தாந்த மகா சமாஜம்.



## ஒரே மாதம் வரையில் ரூபா 5-14-0.



ஓர் உண்மையான கிராமபோன் என்ன விலைக்குக் கிடைக்கிறது பாருங்கள். பிக்மி போன் என்று சொல்லப்படும் சிறிய கைக் கிராமபோன். இது 200, 300 விலையுள்ள பெரிய கிராமபோன்களுக்கு இணையாக வாசிக்கக்கூடியது. இதன் இயந்திர அமைப்பு பெரிய கிராமபோனைப் போலவே உள்ளது. இந்த கிராமபோன் பெட்டியில், சவுண்டு பாக்ஸ், ஹார்ன், இரண்டு டஜன் கொண்ட ஊசிப் பெட்டி எல்லாம் உண்டு. இரண்டு பக்கமும் பாடக் கூடிய ஒரு ரிக்கார்டும் இனமாகச் சேர்த்தனுப்பப்படும். இங்கிலீஷ் பாண்டுகள், சிரித்தல், விகடம் பேசுதல் முதலிய ரிக்கார்டுகள் தயாரிலுள்ளன. தனி ரிக்கார்டு 1-க்கு ரூ. 1. ஒரு ரிக்கார்டுடன் கிராமபோன் பெட்டி 1-க்கு ரூ. 5-14-0. தபால் செலவு ரூ. 1. உடனே எழுதுங்கள்.

*Sole distributors*, **Canadian Watch People**, G. P. O. Madras.



## எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை

### 22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக் கடியாரங்கள்




இதிற் கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச் சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. 4-15-0. வி. பி. வேறு.

ஜினைன் வாட்சு கம்பெனி,<br>மிண்டு பில்டிங் போஸ்டு, மதராஸ்.

ஓம்

# சித்தாந்தம்

“ ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு ”

மலர் உ | சுக்கில ஆண்டு புரட்டாசித் திங்கள் 1929 ௵ செப்டம்பர் ௴ | இதழ் க

## தாழ்வெனும் தன்மை

[பத்திராசிரியர்]

உலகத்திலே மக்கள் ஒருவரோடு ஒருவர் பழகிவரும் முறைகள் பலவுள. அவைகளுள் தலைசிறந்து விளங்குவது தாழ்வெனும் தன்மை. இத்தன்மையை உண்மைச் சைவர்கள் ஒவ்வொருவரும் தமது ஒழுக்கத்துக்கு உயிர்போல வைத்துக் கொள்வது முறை. இத்தன்மையின் சிறப்பைத் திருக்குறளும் சிவஞான சாத்திரங்களும் விதந்து கூறுகின்றன. ஆனல் சைவ மக்கள் இதை அடியோடு மறந்து விட்டார்களோ என்ற ஐயம் இக்காலத்தில் எழுகின்றது.

சைவ உலகத்தை ஒரு சங்கமாக எண்ணிக் கொண்டு அச்சங்கத்தில் சேர்வதற்குரிய தகுதியுடையவர்கள் யாவரெனக் கருதுவோமானல், சிவஞான சித்தியார் செய்யுளொன்று அத்தகுதியைச் செவ்வனே தெரிவிக்கின்றது. அச்செய்யுள்,

“ வாழ்வெனு மையல்விட்டு
  வறுமையாஞ் சிறுமைதப்பித்
தாழ்வெனுந் தன்மையோடும்
  சைவமாம் சமயஞ்சாரும்
ஊழ்பெறல் அரிதுசால
  வுயர்சிவ ஞானத்தாலே
போழிள மதியினானைப்
  போற்றுவார் அருள்பெற்றாரே ”

என்பதேயாம். இச்செய்யுளில் சைவமாம் சமயம் சார்தற்கு முன்னர் மூன்று படிகள் கூறப்பட்டுள்ளன. அவை (1) வாழ்வெனு மையல் விடுதல் (2) வறுமையாம் சிறுமை தப்புதல் (3) தாழ்வெனும் தன்மை யடைதல் என்பனவாம். இப்படிகளைச் சிறிது ஆராய்வாம்.

முதலாவதாக வாழ்வெனு மையல் விடுதல் ஓதப்பட்டது. ஈண்டு கவனிக்கற்பாலது வாழ்வு விடுதல் என்று கூறப்படாமல் வாழ்வெனு மையல் விடுதல் என்று கூறப்பட்டமை. இதிலிருந்து இல்லறத்தைவிட்டு ஓட வேண்டும் என்பது ஆசிரியர் கருத்தல்லவென்று அறியலாம். வாழ்வின்பாற்படும் நான், எனது எனும் அகப்புறப் பற்றுக்களையும், அவைகளால் வரும் மையலையும் ஒழிக்க வேண்டுமென்பதே இச்செய்யுளின் கருத்து என்பது வெளிப்படை. இப்பற்றுக்களை விட்டோரே சைவமாம் சமயம் சார்தற்குரியவர்கள் என்பது ஆசிரியர் கருத்து. ஆனால் இக்காலத்திலோ மூன்று காசுக்காக மூன்று மந்திரிகளையும் முக்காலும் தொழுகின்ற 'பெரியோர்கள்' 'சைவ மெய்யன்பர் மகாநாடுகள்' கூட்டுகின்றனர்.

அகப்புறப் பற்றுக்களை அறவே ஒழித்தவன் வறுமைவாய்ப்பட்டு இழிதொழில் செய்தலுங் கூடுமன்றோ? பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்பது இளம்பிள்ளைகள் பள்ளியிற் பயின்ற நீதி வாக்கன்றோ? இதுபற்றியே "வறுமையாம் சிறுமை தப்பி" என்று ஆசிரியர் கூறுவாராயினார். இதிலிருந்து வறுமையால் பெறக்கூடிய கீழ்மையை ஒழித்தல் வேண்டுமென்று பெற்றோம். "கீழ்மை யகற்று" என்பது ஒளவை மூதாட்டியின் வாக்கு. வறுமையால் வரும் கீழ்மை பெரிதும் சக்தியுடைய தென்பதை "சிறுமை தப்பி" என்பதனால் ஆசிரியர் விளக்குதல் நோக்குக.

கீழ்மை யென்பதை நன்கு உணர வேண்டும். இது பல வகைப்படும். குடிப்பிறப்பின[illegible]று நமது நாட்டு நூல்களில் கூறப்பட்டுள்ளது. இக்கொள்கை எக்காலத்து எச்சமூகத்தினர் கலப்பினால் நமது நாட்டில் நுழைந்தது என்பதை இங்கு ஆராயத் தேவையில்லை. பொதுவாக "குலத்தளவே யாகுமாம் குணம்" என்பன போன்ற வாக்குகளெல்லாம் வம்சவழி வருதல் என்ற இயற்கை விதியை (Natural law of heredity) வலியுறுத்துகின்றன. இது குலச்செறிவியல் (Eugenics) என்ற சாத்திரம் பயின்ற நிபுணர்கள் ஒப்புக்கொள்ளும் விதியே. ஆனால் ஒவ்வொரு மனிதன் குணமும் குலம் ஒன்றினாலேயே தீர்மானிக்கப்படுகிறது என்று முடிந்த முடிபாகக் கொள்வது தவறு. கல்வி முதலிய சேர்க்கைச் செயற்கைப் பொருள்களால் ஒருவனது குணம் மாறுபாடு எய்துவது கண்கூடு. இதை மேல்நாட்டார் (Law of environment) சேர்க்கை விதி என்பர். இதையும் அதிவீரராம பாண்டியர் உணர்ந்தே,

"எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகவென்பார்"

என்று ஓதினார்.

இது நிற்க, அகப்புறப் பற்றுக்களால்வரும் கீழ்மை கொடிது கொடிது. இத்தகைய கீழ்மையே ஆங்கிலத்தில் "Mean-ness" எனப்படுவது. இதை விவரமாகக் கூறத் தேவையில்லை. திருக்குறள் அறத்துப் பாலில் இதைக் கடிவதைப் பரக்கக் காணலாம்.

கீழ்மைக்கும் தாழ்மைக்கும் உள்ள வேற்றுமையை நன்கு உணரவேண்டும். "கீழோராயினும் தாழவுரை" என்பனபோன்ற அரிய வாக்குகளில் இவ்வேற்றுமை இனிது பொறிக்கப்பட்டுள்ளது. கீழ்மைக் குணமுடைய



வரிடத்தும் தாழ்மையாக வுரைக்கவும் நடந்துகொள்ளவும் வேண்டுமென்பதிலிருந்து கீழ்மை வெறுக்கத்தக்கது என்றும், தாழ்மை மேன்மை தரக்கூடியதென்றும் நாம் உணரலாம்.

இனித் தாழ்வெனுந் தன்மையை ஆராய்வாம். இதை ஆங்கிலத்தில் (Humility) என்பர். சாதாரணமாக தெருச்சண்டைகளில்கூட சண்டையை விலக்க முயற்சிக்கும் நடுவு நிலைமையுடையார் இருதிறத்தாரையும் "தாழ்ந்துப் போங்கள்" என்று கூறுவதை நாம் கவனித்திருக்கக்கூடும். அதாவது "உங்கள் தற்போதம், அல்லது செருக்கு அல்லது இறுமாப்பை அடக்கிக் கொள்ளுங்கள். அப்படிச் செய்தால் அச்செருக்கினால் உண்டான உங்கள் வேற்றுமையும் சச்சரவும் ஒழியும்" என்று கூறுவதாயிற்று. இதிலிருந்து செருக்கை ஒழித்தாலன்றித் தாழ்மை கிடைக்காது என்று எளிதில் அறியலாம்.

தாழ்வெனும் தன்மையில் தொண்டு புரிதற்கு இன்றியமையாத நற்குணங்களெல்லாம் அடங்கும். தொண்டு என்ற சொல்லுக்கு வளைதல் என்பது ஒரு பொருள். அதாவது செருக்கு அல்லது தற்போதம் என்ற நெட்டிருப்புப் பாரையைப் பணி செய்தற்குரிய தாழ்வெனுந் தங்கக் கம்பியாக வளைத்தல் என்பதாம். கூன்மிகுந்து முதுகு வளைந்த கிழவனைத் தொண்டு கிழவன் என்ற வழக்கும் இவ்வாறு பொருள் கோடலை வலியுறுத்தும்.

தொண்டு புரிதற்குத் தடையாகவுள்ளது செருக்கு ஒன்றே. குலச்செருக்குடைய ஒருவன் தன் குலத்துக்குத் தாழ்ந்த குலத்தவர் எனத் தான் கருதும் மக்களுக்குத் தொண்டு செய்ய முன்வாரான். அவன் குலச்செருக்கு அத்தொண்டுக்குத் தடையாக நிற்கிறது. அஃதேபோல் கல்விச் செருக்குடைய ஒருவன் தன்னைவிடக் கீழ்ப்பட்ட அறிவாளி என்று தான் கருதும் ஒருவனுக்குத் தொண்டு செய்ய முன்வாரான். உதாரணமாகத் தாங்களே இலக்கணம், சாத்திரம் தெரிந்தவர்கள் என்று கருதும் செருக்காளர்கள் நமது "சித்தாந்தம்" போன்ற பத்திரிகைகளுக்குக் கட்டுரை முதலியன கொடுத்துத் தொண்டு புரிய முற்படார். அன்னார் கல்விச் செருக்கு அத்தகைய தொண்டுக்குத் தடையாக நிற்கிறது. இவ்வாறே செல்வச் செருக்கு முதலிய பலவகைகளிலும் பார்த்தல் கூடும்.

ஆகவே தாழ்வெனும் தன்மை அன்பர்பணி செய்தற்கு இன்றியமையாது வேண்டப்படும் தகுதியென்பது பெற்றாம். தாழ்மையென்பது கீழ்மையல்லவென்றும், தாழ்மையே மேன்மையென்றும் கண்டோம்.

மேற் கூறியவைகளிலிருந்து வாழ்க்கையிற்படும் மையலை ஒழித்துக் கீழ்மைக் குணங்களை யகற்றித் தொண்டுக்குத் தடையாகவுள்ள செருக்கை வேரோடறுத்து அன்பர் பணிக்கு உயிராகவுள்ள தாழ்வெனும் தன்மையைப் பெற்றோரே சைவமாம் சமயம் சார்தற்குரிய பெரியார் என்பது பெற்றோம். இதிலிருந்து அச்சமயத்திற் சார்தற்குரிய மக்கள் தகுதியே இவ்வளவு உயர்ந்ததாகவிருப்பின் அச்சமயத்தில் நின்று பயின்று பயன் பெறும் பெரியார்கள் தகுதி இத்தகையது என்பது அனுமானித்து அறிய வேண்டிய பொருள் ஒன்றாகும்.

# அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திரவுண்மை

## பரிசு பெற்ற கட்டுரை

[அ. மு. சரவண முதலியார்]

(220-ம் பக்கத் தொடர்ச்சி)

### (ரு) இவர் காலத்தவராய நாயன்மார்கள்

சடையனார், இசை ஞானியார், நரசிங்கமுனையரையர், சோமாசிமாறர், விறன்மிண்டர், மானக்கஞ்சாரர், ஏயர்கோன் கலிக்காமர், பெருமிழலைக் குறும்பர், கோட்புலியார் என்பவர்கள் இவரிருந்த காலத்திலேயே இருந்தவராதல் வேண்டும். இவருள் முதல் மூவரும் முறையே தந்தையும், தாயும் வளர்ப்புத் தந்தையுமாவரென்பது முன்னரே காட்டப்பட்டது. சோமாசிமாறரும், பெருமிழலைக் குறும்பரும் ஆரூரரை வழிபட்டுப் பேறு பெற்றவரென்பது பெரிய புராணத்தால் அறியப்படுகின்றதாகலின் அவரும் உடன் காலத்தவராவர். விறன்மிண்டர் 'திருத்தொண்டத் தொகை' நம்பியாரூரர் திருவாயால் வெளி வருவதற்குக் காரணமாயிருந்தவர். கோட்புலியார் தமது அருமைப் புதல்விகளை மணஞ்செய்து கொள்ளுமாறு வேண்டினரென்பதையும், அம்மகளிரை ஆரூரர் தமது புதல்விகளாகக் கொண்டனரென்பதையும் முன்னரே விளக்கினோம். திருநாட்டியத்தான் குடிப்பதிகத்திறுதியில் 'கோட்புலி சென்னி' என்று அருளியிருப்பதூஉங் காண்க. ஏயர்கோன் கலிக்காமர் வன்றொண்டர் இறைவனைத் தூதனுக ஏவியமையாற் சினந்து, அது காரணமாகச் சூலைநோயேற்றதும், ஆண்டுத் திருநாவலூரர் போந்தமையும் பிறவும் பெரிய புராணத்துட் காண்க. இது, 'ஏயர்கோனுற்ற விரும்பிணி தவிர்த்து' என்னும் ஆளுடைய நம்பிகள் திருவாக்கானும் வலியுறுவதாகும். இவ் வேயர்கோன் கலிக்காமருக்குப் பெண் கொடுத்தவர் மானக்கஞ்சாறர் ஆதலின் அவரும் உடன் காலத்தவராக எண்ணப்பட்டார்.

### (சு) இவர் காலம்

நம்பியாரூரர் காலம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியெனத் திருவாங்கூரிற் கல்வெட்டிலாக்காவிற்குத் தலைவராக இருந்து காலஞ் சென்ற டி. ஏ. கோபிநாதராயரவர்கள் 'செந்தமிழ்' மூன்றாந் தொகுதியிற் பொறித்து வெளியிட்டார். தஞ்சை, ராவ்பகதூர் கே. எஸ். சீனிவாசப் பிள்ளை அவர்கள் தமது 'தமிழ் வரலாறு' என்னும் நூலில் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முதற்பகுதி யென வரைந்துள்ளார். ஆகவே, இவ்விரண்டு ஆராய்ச்சியாளர் முடிபும் சிறிதேறக்குறைய ஒத்ததேயாகும்.

இனி, டி. வி. சதாசிவப் பண்டாரத்தாரவர்கள் மேற்காட்டிய இருவர் கொள்கையையும் மறுத்து, கி. பி. 690-710க்கும் இடைப்பட்டதெனக் கூறுகின்றனர். (தமிழ்பொழில் துணர்



3 மலர் 6ல் காண்க.) இஃது உண்மையாயின் கழற்சிங்கர், செருத்துணையாரென்பவரும் இவர் காலத்தவரே என எண்ணவேண்டும். இன்னும் இவர் மேற்காட்டிய 690-710க்கும் இடைப்பட்டிருந்தவர் இரண்டாவது நரசிங்கவர்மரென்றும், பல்லவ அரசரென்றும், அவரைத்தான் ஆரூரர் 'கழற்சிங்கர்' எனக் கூறினரென்றும், அவர் காஞ்சியிற் கைலாயநாதர் கோயில் கட்டி முடித்திருக்குஞான்றுதான் திருநின்றவூரிற் பூசலார் நாயனார் தம் உள்ளத்தின்கண்ணே திருக்கோயில் கட்டினரென்றுங் கூறுகின்றனர். அங்ஙனமாயின் பூசலாரையும் ஆரூரர் காலத்தவரென்று கொள்ளவேண்டும். ஆனால் சேக்கிழார் கழற்சிங்க நாயனார் புராணத்தாதல், பூசலார் நாயனார் புராணத்தாதல் இது கூறினாரில்லை.

இனி மேற்காட்டிய கைலாயநாதசாமி கோயிலின் வெளிப் புறத்திலுள்ள கல்வெட்டு ஒன்றில், 'துஷ்யந்தர் முதலான அரசர் ஆகாயவாணியைக் கேட்டாரானால் ஆச்சரியமில்லை. நற்குணம் பறந்தோடிப்போன கலியுகத்தில் அந்த வாணியை ஸ்ரீபரன் கேட்டது வியப்பைத் தருவதே'' என்றிருப்பதால் அவ்வாகாய வாணிதான் பூசலார் செய்தியைப் பல்லவ மன்னனுக்கு அறிவித்ததாகும் என பீ.டி. சீனிவாசய்யங்காரவர்கள் 'பல்லவசரித்திரத்'தின் இரண்டாம் பாகத்திற் கூறியிருப்பதுங் கருதத்தக்கதாகும்.

இனி, ஆரூரர் திருப்பரங்குன்றம் வணங்கிப் பதிகம் பாடுங்காலை முடியுடை மன்னர் மூவரும் ஆண்டிருந்தனரென அப்பதிகத் திறுதியிற் கூறுகின்றார்; அது 'முடியாலுலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்தாறுமோர் நான்குமோ ரொன்றினையும்' என்பது. இதன்கட் கூறிய பாண்டியனும், சோழனும் யாரென விளங்கவில்லை. சேரர் சேரமான் பெருமாள் நாயனாரெனப் பெரியபுராணத்தா லறிகிறோம்.

இச்சேரமான் பெருமாள் நாவலூர் நம்பியாரூரருடன் நட்பாயிருந்தமைக்கு அகச்சான்று யாதுங் காணோம். ஆனால் பதினோராவது நூற்றாண்டுக்கு முற்பட்டும், நாவலூர் நம்பியாரூரரின் காலமாகிய 8 அல்லது 9-வது நூற்றாண்டுக்குப் பிற்பட்டுமிருந்த 'பூந்துருத்தி நம்பிகாட நம்பி' என்னுந் திருவிசைப்பா ஆசிரியர் கோயிற்றிருவிசைப்பாவில்,

"களையா வுடலோடு சேரமானாரூரன்
விளையாமதமாறு வெள்ளானை மேற்கொள்ள''

என்று கூறியதையும், இதனை ஒட்டி நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியின்கண்,

"சோற்குத் தென்னவலர்
பெருமாற்குச் சிவனளித்த
வீரக்கடகரி முன்புதன்
பந்தியி லுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில்
வீரனை வெற்றிகொண்ட
சூரற்கென துள்ள நன்று
செய்தா யின்று தொண்டுபட்டே''

என்று கூறியதையும் ஆதாரவாகக் கொண்டதுடன் தாம் பலவகையாலுங் கண்ட உண்மைகளையுங் கொண்டு சேக்கிழார் விரித்துக் கூறினரென்க. எனவே சேரமான் பெருமானாரும் அடிகள் காலத்தவரென்பது பெற்றாம்.

### (எ) நம்பியாரூரர் தேவாரத்தாற் குறிக்கப்படும் நாயன்மார்கள்

நம்பிகள் அருளிய திருத்தொண்டத் தொகையிலேயன்றி வேறு அருட்பாக்களிலும் நாயன்மார்களிற் சிலர் பேசப்படுகின்றனர். அவர்கள் புகழ்த்துணையார், சண்டீசர், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், திருநாளைப் போவார், சூதர், (மூர்க்கர்), சாக்கியர், சிலந்தி (கோச்செங்கட் சோழர்), கண்ணப்பர், கணம்புல்லர் எனப்படுவார். இவருள், புகழ்த்துணையாரை 'அகத்தடிமை' என்று தொடங்கும் பாட்டாலும், சண்டீசரை 'ஏத நன்னிலம்' என்று தொடங்கும் பாட்டாலும் வேறு பல பாக்களாலும், மற்றவர்களை 'நற்றமிழ் வல்ல' என்று தொடங்குந் தேவாரத்தாலும் அறிக.

### (அ) திருநாவுக்கரசர்

இவருக்குப் பிள்ளைத் திருநாமம் 'மருணீக்கியார்' என்று கூறப்படுகின்றது. இவரியற்றிய திருத்தாண்டகத்தில், 'மறப்படுமென் சிந்தை மருணீக்கினான்காண்' என்னுந் தொடர் காணப்படுகின்றது. இவர் சமண் சமயம் புகுந்ததற்கும், மீண்டுஞ் சூலைநோய் காரணமாகச் சைவசமயம் புகுந்ததற்கும் நிறைய அகச்சான்றுகள் உள. அவற்றுட் சில,

"கூற்றாயின"

என்று தொடங்கும் பதிகம்.

"அமணரோடே
காதலித்தாய் கட்டநோய்
பிணிதீர்த்தாய் கலந்தருளிப்
போதலித்தாய்"

"திருந்தா வமணர்தந்
தீநெறிப்பட் டுத்திகைத்துமுத்தி
தருந் தாளிணைக்கே
சரண்புகுந்தேன்"

"தக்கார்வமெய்திச் சமண்டவிர்ந் துன்றன்
சரண் புகுந்தேன்"

"ஏவமே துமிலாவம ணேதலர்
பாவகாரிகள் சொல்லைப் பட்டுளேன்
தேவதேவன் திருநெறி யாகிய
பூவணூர்புகு தப்பெற்ற நாளின்றே"

"எண்ணில் சமண்தீர்த்
தென்னையாட் கொண்டார் போலும்"

"குண்டரொடு பிரித்தென்னை
யாட்கொண்டார் போலும்"

என்பன.

"பல்லுரைச் சமணரோடே
பலபல காலமெல்லாஞ்
சொல்லிய செலவு செய்தேன்"

"போற்றாதே யாற்றநாள் போக்கினேனே"

எனவரூஉம் இவை போன்றன பல அவர் பன்னாள்வரையுஞ் சமண்சமயமிருந்ததை நினைந்து வருந்துவதைக் குறிப்பன.

"முயல்விட்டுக் காக்கைபின் போனவாறே"

"கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே"

என்பன போன்றவை அவருக்கு இயல்பாகவுள்ளது சைவசமயமே என்பதை வலியுறுத்துவன.

இவருக்குச் சமண் சமயத்திலிட்ட பெயர் தருமசேனரென்று கூறப்படுகின்றது.

சூலைநோய் நீங்கக் "கூற்றாயின" என்று தொடங்கும் பதிகம் பாடிய முடிவில் இறைவனால் அருளப்பட்ட பெயர் 'திருநாவுக்கரசர்' என்பதாகும்.

"மாசில் வீணையும்" என்ற பதிகம் நீற்றறையிற் பாடப்பட்டதன்று; அந்நீற்றறை தமக்கு இருந்தவாற்றை நினைந்து பின்னர்க் கூறியருளியதாகும். இவ்வுண்மையைச் சேக்கிழார் கூற்றை உய்த்துணரின் அறியலாம்.



"அஞ்சுவதியா தொன்றுமில்லை
யஞ்ச வருவது மில்லை"

"தலைவனாகிய வீசன் றமர்களைக்
கொலை கையானைதான் கொன்றிடு கிற்குமே"

என்பன சமணர்களால் திருநாவுக்கரசரைக் கொல்லும் பொருட்டு ஏவப்பட்ட யானையினாற் றீங்கு விளையாமையைக் குறிப்பன வாகும்.

"வஞ்சனைப்பாற் சோறாக்கி
வழக்கிலா வமணர்தந்த
நஞ்சமு தாக்குவித்தார்
நனிபள்ளி யடிகளாரே"

என்பது அமணர் அவருக்கு நஞ்சூட்டியதையும் அதனால் அவர் ஒரு தீங்குமின்றி யிருந்ததையும் விளக்குவதாகும்.

"கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே"

"தோன்றாத் துணையா யிருந்தனன்"

"அலைகடன்மூடினுங் கண்டேன்புகல்நமக்கு"

"நெடுநீரில் நின்றேற்றி நினைந் தருளி"

"கல்லினோ டெனைப்பூட்டி யமண் கையர்
ஒல்லைநீர் புகநூக்க வென் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியான்
நல்ல நாமநவிற்றி யுய்ந்தே னன்றே"

என்பன சமணர்கள் நாவுக்கரசரைக் கல்லொடு பூட்டிக் கடலிற்போட்டதையும், அதனையே புணையாகக் கொண்டு அடிகள் கரை யேறியதையும் விளக்குவனவாகும்.

அப்பரென்ற பெயர் திருஞான சம்பந்தரால் இடப்பட்டதாகும்.

"மின்னுரு மூவிலைச்
சூலமென் மேற்பொறி"

என்ற தொடர் அடிகள் சூலக்குறியைத் தாம் வேண்டி நின்றமையும், அதனையும், இடபக் குறியையும் ஆண்டவன் அருளியதையுங் குறிப்பதாகும்.

ஆண்டவன் அருட்கழலை இவர் திருமுடிமேல் திருநல்லூரில் வைத்தமையை அவ்வூர்த் திருத்தாண்டகமாகிய "நினைந்துருகும்" என்று தொடங்கும் பதிகமும், "தன்னுடைய திருவடியென்றலைமேல் வைத்தீங்கரும்பை" என்னுந் தொடரும் விளக்குதல் காண்க.

இவர் திருவீழி மிழலையிற் படிக்காசு பெற்றமை 'பாடிப்பெற்ற பரிசில் பழங்காசு' என்னும் அகச்சான்றாலும், இவருக்கு அடுத்த நூற்றாண்டிற்றோன்றியவரும் இறைவன் திருவருள்பெற்று இவருடன் ஒருவராக எண்ணப்படுகிறவருமாகிய வன்றொண்டப் பெருந்தகையார்,

"இருந்துநீர் தமிழோடிசை
கேட்கு மிச்சையாற்
காசுநித்த நல்கினீர்
அருந்தண்விழி கொண்டீர்"

எனக் கூறுவதனாலும், எட்டு அல்லது ஒன்பதாவது நூற்றாண்டுக்குப் பின்னும், பதினோராவது நூற்றாண்டுக்கு முன்னுமிருந்த சேந்தனா ரென்பார் திருவீழிமிழலைத் திருவிசைப்பாவில்,

"பாடலங்காரப் பரிசில்காசருளிப்
பழுத்தசெந்தமிழ் மலர்சூடி
நீடலங்காரத் தெம்பெருமக்க
ளென்சினுள்நிறைந்து நின்றானே"

எனக் கூறுவதனாலும் அறியக் கிடக்கின்றது. திருஞானசம்பந்தர் படிக்காசு பெற்றமைக்கும் இப்புறச்சான்று பொருந்துவதாகும்.

அப்பர் பெருமான் திருமறைக் காட்டிற் கதவு திறக்கப் பாடியமைக்

குச் சான்று 'பண்ணினேர்' என்று தொடங்கும் திருமறைக் காட்டுப்பதிகமேயாகும். கதவு திறத்தற்கு,

“ திறக்கப்பாடிய வென்னினும் ”

என்று அடிகள் சொல்வதே போதிய சான்ருகும். திருஞானசம்பந்தர் பின் அடைக்கப் பாடியதும் இதனை வலியுறுத்தும்.

சிவபெருமான் திருநாவுக்கரசரைத் 'திருவாய்மூருக்கு வா' என்றதற்கு “எங்கே யென்னை” என்று தொடங்கும் அவ்வூர்த் திருக்குறுந்தொகையே தக்க சான்ருகும். அப்பதிகத்திலுள்ள,

“ திறக்கப்பாடிய வென்னினுஞ் செந்தமிழ்
உறைப்பப் பாடியடைப்பித்தா ருண்ணின்
[ருர்”

என்னும் திருப்பாட்டே எம்பெருமக்களாகிய திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் ஒரே காலத்தவர் என எண்ணுதற்கு அகச்சான்ருகவுள்ளது. 'பாடி அடைப்பித்தார் ஞானசம்பந்தர் தான் எனக் கொள்ளுமாறு யாங்ஙனம்?' எனின், “ கதவந் திருக்காப்புக்கொளுங் கருத்தாலே” என அடைக்கப் பாடிய பதிகம் திருஞானசம்பந்தர் தேவாரத்துட் காணப்படுதலாலென்க.

வாகீசப் பெருந்தகையார் திருக்கயிலாயக் காட்சியைத் திருவையாற்றிற் கண்டமை 'மாதர் பிறைக்கண்ணியானை” என்று தொடங்குந் திருப்பதிகத்தின் குறிப்பால் அறியக் கிடக்கிறது.

திருப்பழையாறை வடதளியிலுள்ள பெருமானைச் சமணர்கள் மறைத்து வைத்திருந்தமையும், பின் அது நீங்கப்பெற்று, தாம் தரிசித்தமையும், “ தலையெலாம் பறிக்கும் ” என்று தொடங்கும் பதிகத்தா லறியப்படும்.

இனி, இவர் திருப்பூம்புகலூரில் உழவாரத் திருப்பணி செய்யுங்காலை பல சோதனைகள் செய்யப்பட்டமை 'பொய்ம்மாயப் பெருங்கடல்' என்று தொடங்குந் திருத்தாண்டகப் பதிகத்தாலும், இறுதியில் இறைவன் திருவடியாகிய வீடுபேற்றினை யெய்திய செய்தி 'எண்ணுகேன்' என்று தொடங்கும் பதிகத்தாலும் அறியப்படும்.

### (கூ) திருநாவுக்கரசர் காலம்

இவர் ஆருவது நூற்ருண்டின் பிற்பகுதியிற் ருேன்றி ஏழாவது நூற்ருண்டின் முற்பகுதியில் இறைவன் திருவடி நீழலை யடைந்தன ரென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. கி. பி. 600 முதல் 625-30வரை ஆட்சிபுரிந்த மகேந்திர வர்மனென்பவனே இவரை நீற்றறையிலிட்டது முதல், பல துன்பங்களையுஞ் செய்தவன்.

அவன்மீண்டுந் திருநாவுக்கரசர் திருவடியை அடைந்து வணங்கிச் சைவனுனெனவும், பின் பாடலிபுத்திரத்திலிருந்த சமணப் பள்ளிகளை இடித்துத் திருவதிகையிற் கோயிலெடுத்தானெனவும், அவன் சிறப்புப் பெயர்களுள் குணபரன் அல்லது குணதரன் என்பதும் ஒன்ருகலின், அத்திருக்கோயிலின் பெயரும் குணதரேச்சுரம் எனப்பட்டதெனவும் பெரியபுராணங் கூறுகின்றது. இம்மகேந்திரன் சமண மதத்திலிருந்து சைவசமயம் புக்க உண்மையை அவன்காலத்து ஏற்பட்ட திருச்சிராப்பள்ளி வடமொழிக் கல்வெட்டு ஒன்று வலியுறுத்துகிறது. அதன் பொருளாவது :—

“ லிங்கத்தை வழிபடுங் குணபரனென்னும் பெயரோடுகூடிய அரசன் இந்த லிங்கத்திஞல் (பெற்ற) விபட்ச விருத்தியிலிருந்து திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்டகாலம் நிலைநிற்பதாக.”

என்பது. 'விபட்ச விருத்தி—சமண மதம்.

இனி, திருநாவுக் கரசர் காலத்திலிருந்த ஏனைய நாயன்மார்களைத் திருஞான சம்பந்தரைப்பற்றிக் கூறுவதிற் காண்க. என்னை? இருவரும் ஒரே காலத்தவராகலி னென்க.

### (க0) திருநாவுக்கரசரின் தேவாரத்திற் கரணப்படும் நாயன்மார்கள்

அப்பூதியடிகள், சண்டீசர், கோச்செங்கட் சோழர், சாக்கியர், கண்ணப்பர், கணம்புல்லர், திருஞான சம்பந்தர், அமர்நீதியார், நமிநந்தி யடிகளென்பார். இவருள், அப்பூதியடிகளை 'அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்புமப்பூதி, குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்' என்பதனுலும், சண்டீசரைத் “ தழைத்ததோர் ” என்று தொடங்குந் திருப்பாவினுலும், பிறவற்ருலும், கோச்செங்கட் சோழரைச் 'சிலந்தியுமானைக் காவில்' என்று தொடங்குவதாலும் மற்றவையாலும், சாக்கியரைக் 'கல்லினு லெறிந்து' என்ற முதலையுடைய தாலும் பிறவாலும், கண்ணப்பரைக் 'காப்பதோர் வில்லு மம்பும்' என்று தொடங்குவதாலும் பிறவாலும் கணம்புல்லரை 'அணங்குமை பாகமாக' என்ற தலைப்புடைய தாலும் பிறவாலும், அமர் நீதியாரை 'நாட்கொண்ட தாமரை' என்று தொடங்கும் அருட்பாவினுலும், நமிநந்தியாரை 'ஆராய்ந் தடிந்தடித் தொண்டர்' என்னு முதலையுடைய பாவினுலும் அடிகள் கூறியருளுவது காண்க. பாட்டுக்கள் முழுதும் எழுதின் விரியுமென்று அஞ்சி விடுத்தேன். இவற்றுள் பல பாட்டுக்களில் அவ்வந்நாயன்மார்களின் வரலாற்றுண்மை காணப்படுகின்றது. அதனைத் திருமுறையில் அவ்வத் தலைப்பையுடைய அருட்பாக்களிற் காண்க.

### (கக) திருஞானசம்பந்தர்

திருஞான சம்பந்தர், ஆளுடைய பிள்ளையார் முதலிய பல பெயர்களையுடைய இவரது வரலாற்றின் விரிவைப் பெரிய புராணத்துட் காண்க. 4286 செய்யுட்களையுடைய மேற்படி புராணத்தின்கண் திருஞான சம்பந்தர் புராண மட்டும் 1256 செய்யுட்களை யுடையதென்ருல் அதன் விரிவுக்கு வேறு சான்று கூற வேண்டுமோ?

இவர் வரலாற்றிற் காணப்படும் அற்புதங்களாவன :—

க. கழுமலம் முதலிய பன்னிரண்டு பெயர்களையுடைய சீகாழியின் கண் முத்தமிழ் வேந்தருக்கு மூன்ருவது ஆண்டில் இறைவனும் இறைவியும் காட்சியளித்து ஞானப்பால் ஊட்டினர்.

உ. திருக்கோலக்காவில் சிவபெருமான் இவருக்குப் பொற்ருளங்கொடுத்தருளினர்.

ங. திருவாத் துறையில் முத்துக் குடையும், முத்துச் சிவிகையும், முத்துச் சின்னங்களும் இறைவனுல் அளிக்கப்பட்டன.

ச. திருப்பாச்சி லாச்சிராமத்தில் கொல்லி மழவன் புதல்வியினது முய

லகன் என்னும் நோயைத் தீர்த்தருளியது.

௫. திருக்கொடி மாடச் செங்குன்றூரில் அடியார்களுக்குண்டாகிய வெப்பு நோயை நீக்கியது.

௬. திருப் பட்டீச்சரத்தில் இறைவன் முத்துப்பந்தர் அருளியது.

௭. திருவாவடுதுறையில், தந்தையார் வேள்வி செய்தற் பொருட்டு ஆயிரம் பொன் அடங்கிய முடிப் பொன்றை இறைவனிடம் பெற்றது.

௮. திருமருகலில் பாம்பினாற் கடியுண்டு இறந்த வணிகனொருவனைப் பிழைப்பித்தது.

௯. திருவீழி மிழலையிற் படிக்காசு பெற்றுப் பஞ்சம் நீங்குங்காறும் அடியார்கட்கு உணவளித்தது.

௧௦. திருமறைக் காட்டில் திருநாவுக்கரசராற் றிறக்கப்பட்ட திருக்கதவம் அடைக்குமாறு பாடி அஃது எஞ்ஞான்றும் அடைக்கவுந் திறக்கவுமாகுமாறு செய்தது.

௧௧. மதுரையின்கண் சமணர்களை வாதில் வென்றது.

௧௨. திருக் கொள்ளம் பூதூரில் திருப்பதிகத்தால் ஓடம் விடுத்தது.

௧௩. திருத்தெளிச் சேரிக்குப் போகும் வழியில் போதிமங்கை என்னும் ஊரிலிருந்து வழி மறித்த புத்தநந்தியின் தலையில், அடியாருளொருவர் ஆளுடைய பிள்ளையாரின் திருப்பதிகமொன்றைப்பாடி இடி வீழுமாறு செய்தது.

௧௪. திருவோத்தூரில் ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கியது.

௧௫. திரு மயிலையில் என்பைப் பெண்ணாக்கியது.

௧௬. திருமணத்திற்குப் போந்த அனைவருக்கும் வீடருளியது.

இனி, இவற்றின் உண்மையை அகச்சான்று முதலிய கருவி கொண்டு நிரலே ஆராய்வோம்.

முதலாவதாகிய ஞானப்பாலுண்ட செய்தியைத் திருஞான சம்பந்தரே,

"போதையார் பொற்கிண்ணத்
தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத்
தானெனை யாண்டவன்"

எனக் கூறியருளுகின்றார். அன்றியும் இவர் ஆண்டவனருளைப் பெற்ற அண்மையில் தந் தாயாராகிய பகவதியார் பிறந்த பதியாகிய திருநனிபள்ளிக்கு ஆங்கிருந்து போந்து வேண்டிய மறையவர்களின் வேண்டுகோட் கிணங்கிப் போங்காலை, தந்தையாராகிய சிவபாத இருதயர் தம்மைத் தோளிலெடுத்துச் செல்ல, அதுபோது பாடிய "காரைகள் கூகைமுல்லை" என்று தொடங்குந் திருநனிபள்ளிப் பதிகத் திறுதியில்,

"கடல்வரை யோதமல்கு கழிகானல்பானல்
கமழ்காழி யென்று கருதப்
பலபொரு ளாறுநாலி முனதாகவைத்த
பதியான ஞான முனிவன்
இடுமறை யொன்றவந்தா பியன்மே
லிருந்தின் னிசையாலுரைத்த பனுவல்
நடுவிருளாடு மெந்தை நனிபள்ளியுள்க
வினைகெடுத லாணை நமதே"

என அருளிய அருட்பாவினால், அவர் பாடுங்கால் தந்தையார் தோளிலிருந்தற்குரிய அத்துணை இளம்பருவமென்பதும், அப்பாட்டுகள் மறை முடிவின் கருத்துக்களை யுடையன வென்பதும், அவை இனிய இசைப்பாட்டுகளென்பதும் பிறவுங் காண்க.



இவர் மதுரையில் சமணர்களுடன் வாது செய்யத் தொடங்குங்கால் இவரது இளம் பருவத்தைக் கண்டு அஞ்சிய மங்கையர்க்கரசியாரை நோக்கி,

"மானினேர் விழிமாதராய்
வழுதிக்கு மாபெருந்தேவிகேள்
பானல்வா யொருபால னீங்கிவ
னென்றுநீபரி வெய்திடேல்"

என்பதனாலும் இவர் இளமைப் பருவம் விளங்குவதாயிற்று.

"கோலமாய நீண்மதிற் கூடலால வாயிலாய்
பாலனாய தொண்டு செய்து"

எனத் தம்மிளமைப் பருவத்தினைக் குறிக்கின்றனர்.

இனி, "இவர் ஆண்டவனருண் ஞானப்பாலை உண்டதைத் தாதை, 'யாரெச்சிலை நுகர்ந்தாய்?' என வினவியபோழ்து, 'தோடுடைய செவியன்' என்று தொடங்கும் பதிகந்தான் பாடினாரெனக் கொள்ளுமாறு யாங்ஙனம்? அகச்சான்றில்லையே" என ஐயுறுவார் சிலர். அகச்சான்றில்லையெனினும் முற்றத் துறந்த பட்டினத்தடிகள் திருக்கழுமலமும்மணிக் கோவையில்,

"தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோவென் றழைப்ப முன்னின்று
ஞான போனகத் தருளட்டிக் குழைத்த
ஆனாத் திரளை யவன்வயி னருள
அந்தணன் முனிந்து தந்தாரியா ரென
அவனைக்காட்டு வனப்ப வரனார்
தோடுடைய செவிய னென்றும்
பீடுடைய பெம்மா னென்றும்
கையிற் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினையாங்கே"

என அருளினமை காண்க. இவர் ஒன்பதாவது நூற்றாண்டிலிருந்த வரகுண பாண்டியனைத் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் 'பெரியவன் பின் வரகுண தேவரும்' எனப் பாராட்டி யிருப்பதால் அந்நூற்றாண்டுக்குப் பின்னும், பதினோராவது நூற்றாண்டி லிருந்த நம்பியாண்டார் நம்பிகள் இப்பட்டினத்தடிக ளியற்றிய நூல்களைத் திருமுறை பதினொன்றிற் சேர்த்திருப்பதால் அந்நூற்றாண்டுக்கு முன்னும், எனவே பத்தாவது நூற்றாண்டில் இருந்திருக்க வேண்டுமென்பது ஆராய்ச்சியாளர் துணிபு. ஆகவே இவர் ஆளுடைய பிள்ளையார் காலத்திற்கு இரண்டு நூற்றாண்டுக்குப் பின் இருந்தவராதலாலும், பெரும்புலவர் பெருமானும், இறைவன் மாட்டும் அடியார் மாட்டும் பேரன்பருமாவரென்பது இவரியற்றிய நூலால் விளங்குகின்றமையாலும் இவர் கூற்று வலியுடையதென்க. இதனை ஒட்டி நம்பியாண்டார் நம்பிகள் ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில்,

"மெல்விரலாற் றொட்டியல்
காதனிவ னென்று
தாதைக்குச்சூழ் விசும்பிற்
காட்டிய கன்று"

எனக் கூறிப்போந்தனர். இவ்விரண்டு ஆதரவுகளைக் கொண்டு சேக்கிழார் பெருமான் விரித்துக் கூறினரென்க.

இரண்டாவதாகிய பொற்றாளம் பெற்றதற்கு அகச்சான்று இல்லை; எனினும் இவருக்கு அடுத்த நூற்றாண்டிலிருந்தவரும், இறைவனாற் றடுத்தாட் கொள்ளப் பட்டவரும், சைவசமய குரவருள் ஒருவரும், தீதகன்றுலகமுய்யத் திருத் தொண்டத் தொகை யருளிய திருவாளருமாகிய திருநாவலூரர் பெருமான்,

"நாளுமின்னிசை யாற்றமிழ் பரப்பும்
ஞானசம் பந்தனுக் குலகவர்முன்

*தாளமீந்தவன் பாடலுக் கிரங்குந்*
*தன்மை யாளனை ''*

எனக் கூறுவதும், அதுவுந் திருக்கோலக்காப் பதிகத்திற் கூறியிருப்பதுஞ் சிறந்த சான்றுதல் காண்க. இது தான் சேக்கிழாருக்கு ஆதாரவளித்தது என்க.

மூன்றாவது திருவரத் துறையில் முத்துப்பல்லக்கு முதலியன பெற்றதாகும். இதற்கு வெளிப்படையான அகச்சான்றில்லை. ஆனால் நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் ஏனையோர்களைப் போல் திருஞான சம்பந்தரையுங் கூறிய தோடமையாது அவரைப் பற்றி ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை என ஆறு நூல்கள் செய்திருக்கின்றனர்.. சண்பையர்கோன் வரலாற்றுக் குறிப்புகள் முற்றும் அந்நூல்களில் வந்துள்ளமை காண்க.

நான்காவது கொல்லிமழவன் புதல்வியின் நோயைத் தீர்த்தது. இதற்கு வெளிப்படையான அகச்சான்றில்லையேனும், அதுபோது பாடிய 'துணிவளர்' என்று தொடங்குந் திருப்பாச்சிலாச்சிரமத்துப் பதிகத்தின் பாட்டினிறுதி தோறும் இக்குறிப்பு அமைந்து கிடத்தல் காண்க. அது அகப்பொருட் டுறையிற் பாடியதோவென ஐயம் விளைப்பினும் ஏழாவது பாட்டின்கண்,

*" அங்கிள மங்கையோர் பங்கினர்*
*பாச்சிலாச் சிராமத் துறைகின்ற*
*சங்கொளி வண்ணரோ தாழ்குழல்*
*வாடச்சதிர் செய்வதோ விவர்சார்வே ''*

என்பதில் 'அங்கிள மங்கையோர் பங்கினர்' என்ற குறிப்பு அதற்கிடங்கொடாமை காண்க.

ஐந்தாவது திருக்கொடி மாடச்செங்குன்றூரில் அடியார்களுக்கு நேர்ந்த நளிர் சுரத்தை நீக்கியது. இதற்கும் வெளிப்படையான அகச்சான்றில்லையேனும், அதுபோழ்து பாடிய 'அவ்வினைக் கிவ்வினை' என்று தொடங்குந் திருநீலகண்டப் பதிகத்துப் பாட்டின் ஈற்றடி முழுதும் இதனைக் குறிப்பாலுணர்த்துதல் காண்க.

ஆறாவது திருப்பட்டீச் சரத்தில் முத்துப்பந்தர் பெற்றது. இதற்கு அகச்சான்று யாதுமில்லை.

ஏழாவது திருவாவடு துறையில் பொன் பெற்றது. இதற்குத் தக்க சான்று உள்ளது; அதாவது அடிகளோடு உடன் காலத்தவராகிய திருநாவுக்கரசர் பெருமான்,

" மாயிரு ஞால மெல்லா
மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கை யாளைப்
படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப் பர்போலு
மாவடு துறைய னாரே ''

என அருளியது.

எட்டாவது பாம்பின் விறந்த வணிகனை எழுப்பியது. இதற்கு அகச்சான்று கிடையாது. அப்பொழுது பாடியது 'சடையா யெனுமால்' என்று தொடங்குந் திருமருகற் பதிகமென்பர் சேக்கிழார். 'ஆனால் இது அகப் பொருட்டுறையி லமைந்துள்ளதோ' எனும் ஐயம் எழுகின்றது.



" அதின் மூன்றாவது பாட்டில் 'அழல்வா யரவும்' என்ற குறிப்பு இதனை உணர்த்தும் '' என்பர். அப்பாட்டினிறுதியில் 'இவளை, இறையார் வளைகொண் டெழில்வவ் வினையே' என வருந்தொடர் மேற்படி ஐயுறவை வலிபெறச் செய்கிறது. " ஆறாவது பாட்டின் 3-4 அடிகளாகிய,

*" புலருந் தனையுந் துயிலாள் புடைபோந்*
*தலரும் படுமோ வடியா ளிவளே ''*

என்பன வரலாற்றை ஒட்டியிருப்பதால் விடந்தீர்த்தற் பொருட்டுப் பாடிய தென்பதற்குப் போதிய சான்று எனக் கொள்ளலாகாதோ?'' எனின்,

*" எழுவாள் நினைவாள் இரவும் பகலும் ''*

எனுந் தொடரும்,

*" அலங்க லிவளை யலராக் கினையே ''*

என்பதும்,

*" நெறியார் குழலி நிறை நீக்கினையே ''*

என்பதுமாகிய இவற்றுக்கு என் கூறுவது? மேற்கண்ட தொடர்கள் அகப்பொருட் டுறையில் வரும் பல பதிகங்களில் வருதல் காண்க. இஃது நன்கு ஆராய்ந்து முடிவு கட்ட வேண்டுவதொன்றென்பது எனது கருத்து.

ஒன்பதாவது திருவீழி மிழலையிற் படிக்காசு பெற்றதாகும். இதற்குச் சான்று மேலே திருநாவுக்கரசரைப் பற்றிக் கூறியவிடத்தே கூறி விட்டோம். அன்றியும் நம்பியாண்டார் நம்பி பாடியனவாக மேலே காட்டப்பட்ட ஆறு நூல்களிலுங் காண்க.

பத்தாவதாகிய திருமறைக்காட்டுத் திருக்கதவம் அடைக்கப் பாடியதற்குச் சான்று அதன் பொருட்டுப் பாடப்பட்ட 'சதுரம் மறை' என்னு முதலையுடைய பாட்டி னீற்றிலுள்ள " கதவந் திருக்காப்புக் கொளுங்கருத்தாலே'' என்பதே போதியதாகும். " அது வேண்டிக் கொண்டதாக இருக்கின்றதேயன்றி கதவு அடைத்ததற்குச் சான்று உண்டோ '' எனின் அதனைத் திறக்கப் பாடிய திருநாவுக்கரசர் பெருமான்,

*" திறக்கப்பாடிய வென்னினுஞ் செந்தமிழ்*
*உறைப்பப்பாடி யடைப்பித்தா ருண்ணின்*
*[றூர் ''*

எனக் கூறுவது தக்க சான்றுதல் காண்க.

பதினொன்றாவது மதுரையிற் சமணர்களை வாதில் வென்றது. இஃது பெரியதொரு விஷயமாகும். திருஞான சம்பந்தர் தோற்றத்தின் நோக்கத்தினை உய்த்துணரின் அஃது அற்றைநாள் சமணர்கள் தங்கள்கொள்கைக்குப் புறம்பாகி மன்னர்களைத் தம் வயமாக்கிக் கொண்டு செய்த கொடுஞ் செயல்களை ஒழித்தற் பொருட்டே இறைவ னாணையால் இந்நிலவுலகிற் போந்தது என்பது நன்கு புலனாகும். சிரபுரச் செம்மல் திருத்துருத்தித் தேவாரமொன்றில்,

" அறக்குமா சொலப்படாய்
அருத்தியாய் திருந்தடி
மறக்குமாறிலாத வென்னைமையல்
செய்திம் மண்ணின்மேற்
பிறக்குமாறு காட்டினாய் ''

எனக் கூறுவதனால் அவர், முன்னர் ஆண்டவனுடைய திருவடியை மறவாத ஒருவராக இருந்தமையும், அங்ஙனமிருக்கவும் அவ்விறைவன் அவர் இந்நிலவுலகத்திற் பிறத்தற்கேற்ற ஒரு காரணத்தைச் செய்விக்க...ப்பித்

187135

தாரென்பதும் விளங்குதல் காண்க. இன்னும் இவர்,

“பாலனாய தொண்டு செய்து
பண்டு மின்று முன்னையே”

எனக் கூறுவதாலும் முற் பிறப்பில் தாம் ஆண்டவ னருட்கழலை மறவாத ஒரு தொண்டரென்பதைக் குறிப்பிக்கின்றார். ‘பாலன் ஆய இன்றும்; பண்டும்’ எனக்கொண்டு கூட்டிப் ‘பண்டு’ என்பதற்கு முற்பிறவி எனப் பொருள் கொள்க. அதற்குக் காரணமாகிய ‘மையல்’ யாதென விளங்கவில்லை. அஃது நமது ஞானவள்ளலாருக்கு ஒரு தீவினையாகத் தோன்றினமையாற்றான்,

“பண்டு நான்செய்த பாவங்கள் தீர்ப்பார்
பாம்புர நன்னக ராரே”

எனவும்,

“பண்டு நான்செய்த வினைகள் பறையவோர்
நெறி யருள் பயப்பார்”

எனவுங் கூறியருளின ரென்க.

இங்ஙனம் தோன்றியருளிய இவர் மூன்றாவது ஆண்டிலே பாடுங்கால் (இதற்கு ஆதாரவு முன்னரே காட்டப்பட்டது) பத்தாவது பாட்டில் சமணர்களைக் குறிப்பதென்றால் அவர் பிறப்பு நோக்கம் நன்கு விளங்குகின்ற தன்றோ? இவ் வாதாரவுகளைக் கொண்டே சேக்கிழார் பெருமான் சிவபாத இருதயரும் அவர் மனைவியாராகிய பகவதியாரும் ‘சமண் முதலிய சமயத்தார் கொடுமையை ஒழித்துச் சைவ சமயத்தை நிலைநாட்ட வல்ல மகவு ஒன்று வேண்டும்’ என அம்மையையும் அப்பனையும் வணங்கி வந்தனர் எனக் கூறியருளியதூஉமென்க. என்னை? தாய் தந்தையரின் நினைவு முதிர்ச்சியே குழந்தைகளின் குணமாயமைதலினென்க.

இனி, வெங்குரு வேந்தர் மதுரையின் கண் பல அடியார்களுடன் உறங்கப்பெற்ற மடத்தின்கண் சமணர்கள் பாண்டிமன்னன் ஆதரவை வஞ்சகமாகப் பெற்று நெருப்பு வைத்துவிட்டனர். அதனை யறிந்த காழிக் கன்று ‘அத்தீ, வெப்பு நோயாகி மெல்லச் சென்று பாண்டியனைப் பற்றக்கடவது’ எனப் பணித்தனர். இவ்வுண்மையை அப் பிரமபுரப் பெரியார் அருளிச் செய்த

“செய்யனே திரு வாலவாய் மேவிய
ஐயனே யஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே”

“அப்பனால வாயாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்தனுரை பத்துஞ்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே”

என்னுந் தமிழ் மறையால் உணர்க. அரசன் ஆதரவிற் சமணர்கள் தீ வைத்தன ராகலின் பெருங் குற்றம் மன்னன்பாலது நோக்கியும், அத்தீங்கின் பயனை அவன் நுகர்தல் தான் பெரியோருக்கு ஒப்ப முடிந்ததாகுமென்பது நோக்கியும்,

“வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்கு
ஒப்ப ஞானசம் பந்தனுரை பத்தும்”

என ஆளுடைய பிள்ளையா ரருளியது எண்ணி மகிழ்தற்குரிய தொன்றாகும்.

இனி, சமணருடன் வாது செய்யப் போவதற்கு ஆலவா யண்ணலிடஞ் சென்று திருவுள்ள மறிந்தன ரென்பதற்குக் ‘காட்டுமாவ துரித்து’ என்று தொடங்கும் பதிகமும், ‘வேத வேள்வியை’ என்று தொடங்கும் பதிகமும் சான்றாதல் காண்க. பின் பாண்டியன் வெப்பு நோய் தீரப்பாடி யருளிய



‘மந்திரமாவது’ என்னும் முதலையுடைய பதிகத் திறுதியிலுள்ள

“ஆற்றலடல் விடையேறு மாலவா
யான்றிரு நீற்றைப்
போற்றிப்புகலி நிலாவும் பூசுரன்
ஞான சம்பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற
தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும்வல்லவர்
நல்லவர் தாமே”

என்பது அவன் வெப்பு நோய் நீங்குமாறு அப்பதிகம் பாடப் பெற்றதென்பதற்குத் தக்க சான்றாதல் காண்க. சமணர்களுடன் வாது செய்ய விடை யுடையானிடம் விடைகொண்டமைக்குக்,

“கூடலாலவாய்க் கோனை விடை கொண்டு
வாடல்மேனி யமணரை வாட்டிட”

என்பது சான்றாதல் காண்க. நெருப்பிலிட்ட ஆளுடைய பிள்ளையாரினேடு அழியாமைக்குத் ‘தளிரிள வளரொளி’ என்னு முதலையுடைய பதிக முழுதுஞ் சான்று தருதல் காண்க. வைகை யாற்றின்கண் ஏடு எதிரேறியதற்கு,

“அற்றன்றி யந்தண் மதுரைத்
தொகையாக் கினானும்
தெற்றென்று தெய்வந் தெளியார்
கரைக்கோலைத் தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர் விரவும்
பண்பு நோக்கிற்
பெற்றென் றுயர்த்த பெருமான்
பெருமானு மன்றே”

என்பதும்,

“ஏடு சென்றணை தருமே டகம்”

என்பதும்,

“பருமதின் மதுரை மன்னவை யெதிரே
பதிகம தெழுதிலை யவை யெதிரே
வருநதி யிடை மிசைவரு கரனே”

என்பதும் போதிய சான்றன்றோ?

இனிச் சமணர்களைக்கழுவிலேற்றியமை பெரிய புராணத்துக் கூறப்படுகின்றது. அதற்கு முன்னரே நம்பியாண்டார் நம்பி தாமியற்றிய நூல்களில் அதனைப் பலவிடங்களிற் கூறியிருக்கின்றனர். பெரிய புராணத்தை நன்கு படித்தார்க்குச் சம்பந்தர் சமணரைக் கழுவிலேற்றவில்லை யென்பது நன்கு தெரியும். அதனைச் செய்தவர் அரசர். அவர் தமது கடமையைச் செய்தார். யாரும் தத்தங் கடமையைச் செய்யுங்கால் எப்பெரியாரும் விலக்கார். இவ்வுண்மைகளைப் பெரிய புராணத்துட் கண்டு தெளிக.

பன்னிரண்டாவது திருக்கொள்ளம்பூதூரில் பதிகத்தா லோடம் விடுத்தது. இதனை அதுபோழ்து பாடிய ‘கொட்டமே கமழும்’ என்னும் பதிகம் குறிப்பா லுணர்த்துதல் காண்க.

பதின்மூன்று, திருத்தெளிச் சேரிக்குப் போகும் வழியில் போதி மங்கையில் நிகழ்ந்த செய்தி. இதற்கு அகச் சான்று இல்லை.

பதினான்கு, திருவோத்தூரில் ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கியது. இதற்கு அப்பதிகத் திறுதியில்,

“குரும்பை யாண்பனை யீன்குலை”

என்பது சான்றாதல் காண்க.

பதினைந்தும் பதினாறும் அவ்வப் பதிகங்களின் குறிப்பா லுணரப் படுவனவே யன்றி வேறு வெளிப்படையான அகச் சான்றுகள் கிடையா.

## ௧௨. சிலவற்றிற்கு அகச்சான்று இல்லாமை யல்லது கிடையாமைக் காரணம்

சமய குரவர்கள் தங்கள் வரலாற்றினுண்மையைப் பிற்காலத்தார் செவ்வனே தெரிந்து தங்களைப் போற்ற

வேண்டும் என்னும் எண்ணத்துடன் அகச்சான்று கூறினாரில்லை. அங்ஙனங் கருதிக் கூறியிருப்பாராயின் முறைப்பட அஃதிருப்பதுடன் எல்லாவற்றுக்கும் இருக்கும். அவர்கள் அந்நோக்கத்துடன் கூறியிருப்பின் போற்றுதற்கு உரியவருமாகார். என்னை? ஆண்டுத் தற்போத மிருந்திருத்தலின் என்க. சிற்சில கூறியிருப்பதும் ஆண்டவன் தம்பொருட்டு எளிவந்து காட்சியளித்துக் காட்டிய பேரருளை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் ஆற்றாமல் கூறியதெனவுணர்க. எனவே, இஃது இல்லாமைக்குக் காரணமாயிற்று.

இனி, இவர்கள் பாடிய பதிகத் தொகை திருமுறை கண்ட புராணத்துட் கூறப்பட்டபடி ஒப்புக்கொள்ளுதல் ஆராய்ச்சியாளர்க்கு இயலாததொன்றாயினும், இதுபோழ்து வெளிவந்திருப்பதினும் அதிகம் இருந்திருக்க வேண்டுமென்பது ஒருதலை. பல பதிகங்களிற் பாட்டுக் குறைந்தும், அடி முதலியவை குறைந்துமிருப்பதே இதற்கோர் போதிய சான்றாகும். எனவே, சில பதிகங்கள் அழிந்திருப்பது உண்மையாதலின் அது கிடையாமைக்குக் காரணமாயிற்று.

### (௧௩) திருஞானசம்பந்தர் காலம்

கி. பி. 625-650 வரை இருந்தவன் திருநாவுக்கரசர் காலத்திற் காட்டிய மகேந்திர வர்மனென்னுங் குணதரன் புதல்வனாகிய நரசிம்ம வர்மனென்பவன். இவன் காலத்திற்றான் வாதாவி என்பதைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த சளுக்கிய மன்னனாகிய இரண்டாவது புலிகேசி என்பானொடு பெரும்போர் நிகழ்ந்தது. இப்போரில் நரசிம்மவர்மன் வெற்றி கொண்டான். வாதாவி என்னும் அந்நகரத்தை அழித்து அங்குத் தன் வெற்றி மரத்தை நாட்டி, அதன்மேல் தன் வீரச் செயல்களைக் குறித்து ஒரு கல்வெட்டு வெட்டுவித்தான். அது இதுபோழ்து அழிந்துவிட்டதெனினும் அதன்மேல் நரசிங்கன் பட்டப் பெயரான 'மகாமல்ல(ன்)' என்பதும், 'க்ஷிதிபுஜாம் அக்ரேஸ்வர: பல்லவ' (அரசரில் முதல்வனான பல்லவன்) என்பதும், 'ஸ்நம்பம்ஜய' என்பதும், '(நரஸி)ம்ஹ விஷ்ணு' என்பதுமாகிய இவற்றை இப்பொழுதுங் காணலாம். இது நடந்தது கி. பி. 642-ல். அப்போரின்கண் மேற்படி நரசிம்ம வர்மனுக்குப் படைத் தலைவராக இருந்து வெற்றி பெற்று மேற்படி நகரத்தை அழித்தவர் சிறுத்தொண்டரென்னும் பரஞ்சோதி என்பவர். இதனை,

"மன்னவர்க்குத் தண்டுபோய்  
வடபுலத்து வாதாவிற்  
றொன்னகரந் துகளாக துளைநெடுங்  
கைவரை யுகைத்துப்  
பன்மணியு நிதிக் குவையும்  
பகட்டினமும் பரித்தொகையும்  
இன்ன வெண்ணில கவர்ந்தே  
இகலரசன் முன்கொணர்ந்தார்"

என்னும் பெரிய புராணச் செய்யுளால் அறிக. எனவே அச்சிறுத்தொண்ட நாயனார் திருஞானசம்பந்தர் காலத்தவரென்பது "பைங்கோட்டு மலர்" என்று தொடங்கும் பதிகத்தில் 'சிறுத்தொண்டன் பணி செய்ய' எனவும், 'வெந்த நீறணி மார்பன் சிறுத்தொண்டனவன் வேண்ட' எனவும் நிகழ் காலத்தாற் கூறும் அவர் தேவாரத்தாலும், அதனை ஒட்டிக் கூறும் பெரிய புராணம் முதலியவற்றாலும் அறியலாம். எனவே ஆளுடைய பிள்ளையாரின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்ப.

### ௧௪. இவர் காலத்திலிருந்த நாயன்மார்கள்

திருநாவுக்கரசர், நெடுமாறரென்னும் பாண்டியன், மங்கையர்க்கரசியரர், குலச்சிறையார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், சிறுத்தொண்டர், முருகர், திருநீலநக்கர், குங்குலியக்கலயர், அப்பூதி அடிகளென்பார்.

### ௧௫. இவர் தேவாரத்துக் காணப்படும் நாயன்மார்கள்

சண்டேசர், நமிநந்தி, திருநீல கண்ட யாழ்ப்பாணர், புகழ்த்துணையார், முருகர், திருநீல நக்கர், சிறுத்தொண்டர், மங்கையர்க் கரசியார், குலச் சிறையார், கண்ணப்பர் முதலியோர். இவருள் சண்டேசரை 'வந்த மணலால்' என்று தொடங்கும் பாவாலும் இது போன்ற பல பாட்டுக்களாலும், நமிநந்தி யடிகளைத் 'தாவி யவனுடனிருந்து' என்று தொடங்குந் திருப்பாவினாலும், திருநீலகண்ட யாழ்ப்பாணரை 'நாணமுடை வேதியனும்' என்ற முதலையுடைய அருட்பாவினாலும், புகழ்த்துணையாரை 'நிலந்தணீரோடனல்' என்று தொடங்கும் பாவினாலும், முருகரைத் 'தொண்டர்தன்' 'ஈசனேறமர்' என்ற முதற் குறிப்பையுடைய அருட்பாக்களாலும், திருநீல நக்கரைப் 'பொடிதனைப் பூசுமார்பில்' 'மறையினார்மல்கு' என்று தொடங்கும் பாக்களாலும், சிறுத்தொண்டரைப் 'பைங் கோட்டு' என்று தொடங்கும் பதிகத்தாலும், மங்கையர்க் கரசியாரையும் குலச்சிறையாரையும் 'மங்கையர்க்கரசி' என்று





தொடங்கும் பதிகத்தாலும், கண்ணப்பரை 'வேயனைய தோளுமை' என்று தொடங்கும் பாட்டாலும் புகழ்ந்திருக்கின்றனர்.

### ௧௬. பிற நாயன்மார்கள்

கி. பி. 600 முதல் அதாவது மகேந்திர வர்மன்காலத்திலிருந்து தான் செப்புப் பட்டயங்கள், கல் வெட்டுகள் முதலியன உண்டானதென்பது ஆராய்ச்சியாளர் முடிபு. எனவே அதற்கு முற்பட்டே பல நாயன்மார்கள் இருந்திருக்கலாமன்றோ? அவர்கட்குக் கல்வெட்டு ஆதரவு கிடைத்தலரிது. பிற்பட்டவர்களுக்கும் அனைவருக்குங் கிடைப்பதென்பதரிதாகும். என்னை? மன்னர்களாயிருந்து பெரும்போர் புரிந்து வெற்றி பெற்றவர்கள் பெயரே கல்வெட்டுகளில் பெரும்பாலுங் காணப்படுதலினென்க.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் தேவாரமும், இவர்களை யடுத்துத் தோன்றிய திருநாவலூரர் திருத்தொண்டத் தொகையும் பிற தேவாரமும், இவரை யடுத்துத் தோன்றிய திரு விசைப்பா ஆசிரியருட் சிலரும் பட்டினத்தடிகளுங் கூறிய பாக்களும், அவர்களையடுத்துத்தோன்றிய நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதியும் பிற நூல்களும், அவர்களை யடுத்துத் தோன்றி, தோற்றுவாயிற் கூறிய குணங்களனைத்து முடையவராகிய சேக்கிழார் கூற்றும் இவர்கள் கூற்றை ஒட்டி ஆங்காங்குக் காணப்படுங் குறிகளுமாகிய இவற்றை விடச் சரித்திரவுண்மைக்கு வேறு ஆதரவும் வேண்டுமோ? இவற்றுள் திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டர் திருவந்

தாதி, சேக்கிழார் பெரிய புராணமாகிய இம்மூன்றையும் பொதுவாகவும் மற்றவற்றைச் சிறப்பாகவுங் கொண்டு பார்ப்போம்.

திருநீலகண்டர் உண்மை சிதம்பரத்திலுள்ள 'இளமை யாக்கியார் குளம்' முதலிய குறிகளாலும், இயற்பகையார், இளையான்குடி மாறர், மெய்ப் பொருள், விறன்மிண்டர் ஆகிய இவர்களுண்மை பொதுவாலும், அமர்நீதியாருண்மை முன் காட்டப்பட்ட அப்பரடிகளின் அருட்பாவாலும், எறிபத்தரும் ஏனாதியாருமாகிய இவ்விருவருண்மை பொதுவாலும், கண்ணப்பருண்மை, தேவாரம், திருவாசகம், நக்கீரரும் கல்லாடதேவரு மியற்றிய திருக்கண்ணப்பர் திருமறம், திருவிசைப்பா, பதினோராந் திருமுறையாகிய இவற்றாலும், குங்குலியக்கலயர், மானக்கஞ்சாறர், அரிவாட்டாயர், ஆனாயர், மூர்த்தியார் என்னு மிவர்களுண்மை பொதுவாலும், முருகருண்மை திருஞான சம்பந்தர் திருவாக்காலும் (முன் காட்டப் பட்டது)' உருத்திர பசுபதியாருண்மை பொதுவாலும், திருநாளைப் போவாருண்மை முன் காட்டப்பட்ட நம்பியாரூரர் தேவாரம், திருப்புன்கூரிலுள்ள 'நந்தன் குளம்' முதலியவற்றாலும், திருக்குறிப்புத் தொண்டருண்மை பொதுவாலும், சண்டேசருண்மை முன் காட்டப்பட்டபடி மூவர் தேவாரத்தாலும் திருவாசகத்தாலுந் திருவிசைப்பாவாலும் திருக்கோயிற் குறிகளாலும், குலச்சிறையாருண்மை திருஞான சம்பந்தர் தேவாரத்தாலும், பெருமிழலைக்குறும்பருண்மை பொதுவாலும், காரைக்காலம்மையாருண்மை அவரியற்றியருளிய மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதியாலும், அவற்றின் கண்ணுள்ள அகச்சான்றுகளாலும், அப்பூதியடிகளுண்மை முன்காட்டியபடி திருநாவுக்கரசர் தேவாரத்தாலும், திருநீலநக்கருண்மை திருஞானசம்பந்தர் தேவாரத்தாலும் (முன்காட்டப்பட்டது), நமிநந்தியடிகளுண்மை முன் காட்டியவாறு வெங்குருவேந்தர், ஆமூரரசு ஆகிய இருவர் தேவாரத்தாலும், ஏயர்கோன் கலிக்காமருண்மை நாவலூர் நம்பியாரின் நற்பாவினாலும் (முன்காட்டப்பட்டது) திருமூலருண்மை அவரியற்றியருளிய திருமந்திரத்தாலும், தண்டியடிகளுண்மை பொதுவாலும், மூர்க்க நாயனாருண்மை முன்காட்டியவாறு ஆளுடைய நம்பியாரின் அருள்வாக்காலும், சோமாசிமாறருண்மை பொதுவாலும், சாக்கியருண்மை முன் காட்டியபடி ஆரூரரும் அப்பருமாகிய இருவர் மொழியாலும், சிறப்புலியாருண்மை பொதுவாலும், சிறுத்தொண்டருண்மை திருஞானசம்பந்தரின் திருவருட்பாவினாலும் (முன் காட்டப்பட்டது). சேரமான் பெருமாளுண்மை அவரியற்றிய பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கைலாய ஞானவுலா வென்னும் இந்நூல்களாலும், கணநாதரும் கூற்றுவருமாகிய இவ்விருவருண்மை பொதுவாலும், புகழ்ச்சோழருண்மை பொதுவாலும், நரசிங்க முனையரையருண்மை நம்பியாரூரர் நற்றமிழாலும் (முன் காட்டப்பட்டது). அதிபத்தர், கலிக்கம்பர், கலியர், சத்தி ஆகிய இவர்களுண்மை பொதுவாலும், ஐயடிகள் காடவர்கோனுண்மை அவரியற்றிய க்ஷேத்திரத் திருவெண்பாவாலும்.



கணம்புல்லருண்மை முன்காட்டியபடி தமிழ்விரகரும் தாண்டகவேந்தருமாகிய இருவர் தேவாரத்தாலும், காரியாருண்மையும், நெடுமாறர், வாயிலார், முனையடுவார், கழற்சிங்கர், இடங்கழியார், செருத்துணையாராகிய இவர்களுண்மையும் பொதுவாலும், புகழ்த்துணையாருண்மை மூவர் தேவாரத்தாலும் (முன் காட்டப் பட்டது). கோட்புலியாருண்மை சுந்தரமூர்த்திகளின் தேவாரத்தாலும் (முன் காட்டப்பட்டது). பூசலாருண்மை பொதுவாலும், மங்கையர்க்கரசியாருண்மை சம்பந்தர் தேவாரத்தாலும் (முன் காட்டப் பட்டது). நேசருண்மை பொதுவாலும், கோச்செங்கட் சோழருண்மை மூவர் தேவாரத்தாலும் பல திருக்கோயில்களாலும், திருநீலகண்ட யாழ்ப்பாணருண்மை திருஞானசம்பந்தர் தேவாரத்தாலும், சடையர், இசைஞானியாருண்மை நாவலூரர் தேவாரத்தாலும் நன்கு பெறப்படுதல் காண்க. சிறப்புக் கூறிய எல்லாவற்றோடும் பொதுவையுங் கூட்டிக் கொள்க. அன்றியும், ஒவ்வொரு நாயன்மார்களு மிருந்த ஊரிற்சென்று பார்த்தால் ஆங்காங்கு அவரவர் இருந்தமைக்கு அறிகுறியாகச் சில அடையாளங்கள் இன்னமு மிருப்பது கண்கூடு. எனவே தனியடியார்கள் வரலாற்றுண்மையில் யாதும் ஐயுறவில்லையென்க.

---

# பெண்ணடியவர் மூவர்

## உ. காரைக்காலம்மையார் சரிதத்தின் அரும்பொருள்கள்

[பண்டிதை - கிருஷ்ணவேணியம்மாள்]

(196-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி அம்மையார் சரிதத்திலுள்ள அரும்பொருள்களைச் சிறிது ஆராய்வாம். பெருஞ் சிறப்பு வாய்ந்த வணிகர் குலத்திற் பிறந்த புனிதவதியார் மற்றக் குழவிகளைப் போன்று பேசப் பழகுங்கால் உலகியல் வார்த்தைகளையும் அத்தையைத் திட்டு, அண்ணனை உதை எனச் சில 'பெரியோர்கள்' கற்றுக் கொடுக்கின்ற குற்றமான வார்த்தைகளையும், செய்கைகளையுமே பேசியும், பழகியும் வராமல்,

> "குழலினிது யாழினிதென்ப தம்மக்கண்
> மழலைச் சொற் கேளாதவர்"

என்னும் தெய்வப்புலவர் வாக்கியத்தின்படி யாழினும், குழலினும் இனிமை வாய்ந்த மழலைச் சொற்கள் பேசும் பருவத்திலேயே பணியணிவாராகிய சிவபிரான் திருவடிக்கு அடிமை பூண்டொழுகும் மொழிகளையே மனக்காதலுடன் பேசப் பழகி வந்தனர். அன்றியும் வண்டல் என்னும் விளையாட்டயரும் பருவத்திலும், வீண் வார்த்தைகளிலும், வீண் செய்கைகளிலும் தன் காலத்தைப் போக்காது, இளஞ் சந்திரனை முடியில் அணிந்த அண்டர்பிரானைத் துதித்தலிலும், அவரைத் தொழுவதற்காகும் பணிகளியற்றுவதிலுமே தமது வாழ்நாளைக்கழித்து வந்தனர். இங்ஙனம் இளம்பருவத்திலேயே இறைவன்மாட் டன்புபூண்டொழுகி அவர் அருளையே எதிர்

பார்த்துக் கொண்டிருந்தனர் என்பதற்கு,

“ பணியணிவார் கழற்கடிமை
பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காதற்
றதும்பவரு மொழிபயின்றார் ”

எனவும்,

“ வண்டல்பயில் வனவெல்லாம்
வளர்மதியம் புனைந்தசடை
யண்டர்பிரான் திருவார்த்தை
யணையவரு வனபயின்று ”

எனவும் சேக்கிழார் கூறியிருப்பதே தக்க சான்றாகும். நிற்க.

செல்வக் குடிகளில் பிறந்த நம் பெண்மக்களில் சிலர் தங்கள் விலையுயர்ந்த ஆடையணிகளை அணிந்து கொள்வதிலும், பிறருக்கு இகழ்வையும் தனக்குப் புகழையும் உண்டாக்கக் கூடிய வார்த்தைகளைப் பேசுவதிலும், பிறர் செய்யும் சிறு சிறு குற்றங்களை எடுத்துத் தூற்றுவதிலும், தங்களைப்போன்ற செல்வர் தம் வீட்டிற்கு வருவாராயின் தங்கள் பெருமை தோன்ற ஆரவாரத்தோடு அவர்களை உபசரிப்பதிலுமே தங்கள் அருங்காலத்தைக் கழித்து வருகின்றனரேயன்றி,

‘‘ காணார் கேளார் கான்முடப் பட்டோர்
பேணுநரில் லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி ’’

என்றவாறு ஏழைகட்கும், தங்களால் உழைத்துப் பொருள்தேட வன்மையற்ற நோயாளிகள், கூன் குருடு முதலியவர்கட்கும் உதவி புரிவதிலும், தங்கள் அறிவை விளக்கக்கூடிய அறநூல்களைப் படிப்பதிலும், நல்ல எண்ணங்களினால் மனத்தைத் தூய்மைப் படுத்துவதிலும், கடவுளை வழிபடுவதிலும் தங்கள் வாழ்நாளைப் பயன்படுத்த முயற்சிப்பதில்லை. ஆனால் நம் தெய்வத் திருவருள்பெற்ற அம்மையாரோ, இல்லறத்தில் ஈடுபட்டிருப்பினும் நேரங் கிடைத்த போதெல்லாம் அறநூல்களைப் படிப்பதிலும், பிறருக்கும் தமக்கும் நன்மை பயக்கக்கூடிய வார்த்தைகளைப் பேசுவதிலும்,

“ கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழா அரெனின் ’’

என்றபடி இறைவனை மனமுருகித் தொழுதலிலும்,

“ பிறத்தலு மூத்தலு பிணிப்பட்டி ரங்கலு
மிறத்தலு முடைய திடும்பைக் கொள்கல
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன் ’’

என்பதற் கிணங்க தக்கார்க்கு உதவி புரிதலிலும், சிவபிரானின் மெய்யடியார் எக்குலத்தினராயினும் அவர்கட்கு உணவையும் அவர் வேண்டிய மற்றப் பொருள்களையும் கொடுத்து, அவர்களைத் தகுமுறையில் உபசரித்தலிலும் சிறந்து விளங்கினர். இப்பண்பை விளக்கவே சேக்கிழார் பெருமான்,

“ நம்பரடி யாரணைந்தா
னல்லதிரு வமுதளித்துஞ்
செம்பொன்னு நவமணியுஞ்
செழுந்துகிலு முதலான
தம்பரிவி னலவர்க்குத்
தகுதியின் வேண்டுவகொடுத்து
மும்பர்பிரான் றிருவடிக்கீ
ழுணர்வுமிக வொழுகுநாள் ’’

என மொழிந்தனர்.

இன்றும் அம்மையார் அடியவருக்கு உணவிட்டதை நோக்குங்கால் நம்மனோர்களில் பெரும்பாலார் ஏழைகள் எத்துணைப் பசித்து இளைத்துவரினும் தாங்கள் உண்டபிறகு அவர்கட்கு உணவு தருவரே யன்றித் தமக்குமுன் அவரை உண்பிக்க மாட்டார், அதன்றியும் தமக்கென வைத்துள்ள சுவையுள்ள பண்டத்தைத் தன்னை நோக்கி வரும் ஏழைகட்குக் கொடார். இம்முறையில் அம்மையார் அறம் எத்துணைச் சிறப்புடைத்தாகும். நிற்க.



கணவனார் அம்மையாரை நோக்கி ‘‘இன்னுமொரு மாம்பழம் கொணர்க’’ எனக் கூறிய அக்கணமே இறைவனிடம் சென்று கனியை வேண்டிப் பெற்று அதனைத் தங் கணவனிடமளித்தனர். இதனால் இவர் தம் கணவனிடம் மிக்க அன்பு பூண்டொழுகினர் என அறியலாம். இதன்றியும், கணவனார் இரண்டாவது கனியைக் கேட்டபோது அக்கனி உபயோகித்த விதத்தைக் கூறுவதற் கஞ்சி, தாம் தமக்கு உரிமையானவரிடத்தில் ஒரு பொருளைப் பத்திரப் படுத்தி வைத்து வேண்டிய போது பெற்றுக் கொள்வதைப் போன்று இறைவனிடஞ் சென்று கனிக்காக வேண்டி, அதைப் பெற்றதைக் கூர்ந்து நோக்குங்கால் பல்லாண்டுகள் உடல் வருந்தித் தவஞ் செய்தவரும் பெறுதற் கரிய இறைவனருட் டிறத்தை அம்மையார் பெற்றிருந்த போதினும், தாம் அவ்வமயம் மேற்கொண்டிருந்த இல்லற தருமத்திற் கேற்பக் கணவனுக்கு மிக அஞ்சினராய், தாம் மேற்கொண்ட அக்கடமையைப் பழுதற முடிப்பதே சிறந்த அறமெனக் கூறும் ஆன்றோர் வாக்கியத்தைச் சிரமேற் கொண்டாரென்பது தெற்றெனப் புலப்படும்.

இரண்டாவது மாங்கனியை உண்ட பரமதத்தனார் ‘‘இக்கனி உனக்குக் கிடைத்தது யாங்ஙனம்?’’ என்று அம்மையாரைக் கேட்டபோது தமக்கு இறைவனிடத்தில் உண்டாயிருந்த தலைசிறந்த அன்பையும், அதன் பயனாகத் தாம் பெற்றிருந்த அருட்டிறத்தையும் உடனே கணவனுக்குக் கூறுவதற்கஞ்சி நின்றனர். இதுதான் பெண்களுக் குரிய மன அடக்கமென்னும் ‘‘பேதமை’’க் குணம். பேதமை என்பதற்கு ஆசிரியர் நக்கீரனார் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை எனப் பொருள் கூறியுள்ளார். ஆகவே அறிவுடையோர்கள், தாங்கள் அறிவிற் சிறந்த பெரியோர்கள் வாயிலாய்க் கேட்டுணர்ந்த சிறந்த பொருள்களைத் தகுதியற்ற பலருக்கும் வெளியிடாமல், தக்க காலம் நேர்ந்தபோதே தகுதியுள்ளோருக்கு அவைகளைக் கூறுவர். ஆனால், நம் இளம் பெண்களில் பலர் தாங்கள் நன்கு ஆராயாமலே புதிதாகக் கொண்ட நட்பினரிடம் சிந்தியாமல் தங்கள் மறை பொருள்கள் யாவற்றையும் கூறிவிட்டுத் தங்களிருவருக்குமுள்ள தொடர்பு நீங்கிய காலத்தில் ஒருவர் மற்றொருவருடைய குற்றங்களைப் பல்லோர் முன் கூற, இதனால் அவர்கள் துன்பமுற்று,

‘‘ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை
தான் சாந்துயரந் தரும்’’ [கடைமுறை

என்பதற் கேற்ப வருந்துகின்றனர். இவ்விடத்தில் அம்மையார் தங் கணவனிடத்தும் எத்துணை மனவடக்கத்தைப் பெற்றிருந்தனர் என்பது அறியற் பாலது. பின் பரமதத்தனார் இறைவனருளால் கனி கிடைத்த வரலாற்றை உணர்ந்து ‘‘உனக்கு இக்கனி ஈசனருளால் கிடைத்திருக்குமாயின், அவனருளால் இன்னுமொரு கனியை வருவிக்க’’

எனக் கூறியவுடனே சிறிதுந் தயங்காராய் இறைவன் தமக்குக் கொடுப்பர் என்ற நம்பிக்கையுடன் சென்று சிவபிரானைத் தூயமனதுடன் வேண்டி மற்றொரு கனியையும் பெற்றனர். இதனால் நம்பிக்கையான தூய எண்ணங்களின் முனைப்பு எத்துணை நன்மையைத் தருகின்றதென்பதை உணர்ந்தாம். இனித் தூய எண்ணங்களின் தன்மைகளைப்பற்றிச் சிறிது கூறுவாம். சொற்களுக்கு உருவம் உண்டென்பதைப்பற்றி யாம் அதிகம் விளக்க வேண்டுவதில்லை. ஏனெனில் இதற்கு யாம் நாடோறும் பார்த்தும் கேட்டும் வருகின்ற ஒலி எடுக்குங் கருவியே (Gramaphone) தக்க சான்றாகும். இதைப்போன்றே நம் எண்ணங்கட்கும் உருவங்கள் உண்டெனக் கல்வியறிவிற் சிறந்த அறிஞர் எழுதியுங் கூறியும் வருகின்றனர். இதை இங்கு விரிக்கிற் பெருகும். ஆதலால் நாம் எப்போதும் தூய எண்ணங்களையே எண்ணிக் கொண்டிருப்போமாயின், நம் இத்தூய எண்ணங்கள் பல தூய நினைவுகளையுடைய அறிஞர் உள்ளத்திற் புகுந்து, ஒன்றோடொன்று கலந்து வன்மையுடையதாய் மறுபடியும் அத்தூய உணர்ச்சிகள் நம்மனதிலும் நுழைந்து, நம் எண்ணங்களை வன்மைப்படுத்தி நம்மைமேன்மேலும் சிறந்த நினைப்புக்களில் ஊன்றி நிற்கச் செய்வது மாத்திரமேயன்றி அவைகளும் நிறைவேறுகின்றன.

ஆதலால்,

"வெள்ளிபொன் மேனியதாகும் வினையுடை
உள்ளுடம் பிருய வொளி"

என்னும் அவ்வைக் குறளின்படி அம்மையார் தூய எண்ணங்களையே எப்போதும் வகித்து அத்தூய நினைவுகளினாலேயே தஞ் சூக்கும சரீரத்தை வளர்த்துக் கொண்டும், தூய எண்ணத்தையுடைய தொண்டர்மாட்டு அன்பு பூண்டொழுகியும் வாழ்ந்து வந்தனர். இதற்கு அம்மையார் கூறிய,

"மறித்து மடநெஞ்சே
வாயிலுஞ் சொல்லிக்
குறித்துத் தொழுதொண்டர்
பாதங்—குறித்தொருவர்
கொள்ளாத திங்கட்
குறுங்கண்ணி கொண்டார்மாட்
டுள்ளாதார் கூட்ட
மொருவு"

என்னும் செய்யுளே தக்க சான்றாகும். இன்னும்

"நல்லவென உறுப்புநு
லவருரைக்கு நலநிரம்பி
மல்குபெரு வனப்புமீக்
கூரவரு மாட்சியினால்"

எனச் சேக்கிழார்பெருமான் மொழிந்தபடி உறுப்பிலக்கணத்திற் கூறியதற்கேற்ப அம்மையார் அழகுமிக்கிருந்தனரே யாயினும், அவர் இறைவனுணர்ச்சியில் ஈடுபடுவதாகிய அருளழகைச் சிறந்ததென மதித்தனரேயன்றி உலக உணர்ச்சியில் ஈடுபடுவதாகிய உடம்பழகைப் பெரிதெனக் கருதினாரில்லை.

அதனாற்றான் தங் கணவன் தம்மை வழிபடுகடவுளாக எண்ணித் தந் திருவடிகளில் வீழ்ந்து வணங்கியதும், திடுக்கிட்டாராய், தமது உடலழகு உடனே நீங்கி இறைவனை வணங்குவதற்குத் தகுதியான அருளழகோடுங் கூடிய பேய் வடிவம் பெறவேண்டுமென இறைவனை இறைஞ்சி நின்றனர். இதனால் அவர் சிற்றின்பமாகிய உலக வாழ்விற்கு உடலழகையும்



பேரின்பமாகிய முத்தி வாழ்விற்கு ஆன்ம அழகையும் பேணி வந்தனர் எனத் தெளியலாம். அம்மையார் உடலழகைப் பேணுதற்கு ஒரு முயற்சியையுங் கைக்கொள்ளாவிடினும் "உள்ளே புறம்" எனவும் "மனம் போல வாழ்வு" எனவும் கூறியிருப்பதற்கேற்ற மனத்தூய்மை யடைந்து இறைவனருளொளி மனதில் பதியப் பதிய உள்ளுடம்பாகிய சூக்கும சரீரம் ஒளி விட்டொளிர்வதுபோல உடலழகும் சுடர்விட்டொளி வீசியது.

அம்மையாரும், கணவரும் இல் வாழ்க்கையில் ஒற்றுமை யுடையவர்களாகவும், ஒருவருக்கொருவர் உண்மை அன்புடையவர்களாகவும், வாழ்க்கையை நடத்துவதில் ஒரேவித மன உணர்ச்சி யுடையவர்களாகவு மிருப்பினும், இறைவனுணர்ச்சியில் மாறுபட்ட இயல்பை உடையவர்களாயிருந்தனர். எங்ஙனமெனில், அம்மையார் உலகவாழ்க்கையில் ஈடுபட்டார்போல் காணப்படினும் அவர் தம் எண்ணம் முழுதும் இறைவனிடமே பொருந்தி யிருந்தது. ஆனால் பரமதத்தனாரியல்பு மிகச் சிறந்ததாயிருப்பினும், அவர் மனம் பொருளீட்டுவதிலும் உலக இன்பங்களை அனுபவிப்பதிலும் உலகத்தாருக்கு இனிமை யுடையராய் நடப்பதிலும் பதிந்து நின்றதே யன்றி இறைவனுணர்ச்சியில் மிகுதியும் ஊன்றி நிற்கவில்லை. ஆதலாற்றான் இறைவனருளைப்பெற்ற அம்மையாரின் திறத்தைக் கண்டதும் அஞ்சி விலகிச்சென்றனர். அங்ஙனமின்றிப் பரமதத்தனார் அம்மையாரின் கடவுட்டன்மையோடு நெருங்கிப் பழகியிருப்பாராயின் அவரும் அவ்வருளைப் பெற்று இன்புற்றிருப்பர்.

(தொடரும்)

---

# "சைவக் குறும்பு"

[பத்திராசிரியர்]

சுய மரியாதை இயக்கத்தையும் அதைப் பரப்பும் நோக்கமுடைய "திராவிடன்" "குடியரசு" பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரைகளையும் ஆராய்ந்து அவைகளின் பொருந்தாமை, பொய்ம்மை முதலியவற்றை நாம் வெளியிடத் தொடங்கிய நாள் தொட்டு நமது பத்திரிகை தமிழ்நாட்டுக்குச் செய்துவரும் பணியைப் போற்றி நூற்றுக்கணக்கான சந்தாதாரர்கள் நமது பத்திரிகையை வாங்கத் தொடங்கி ஆதரவளித்து வருகின்றனர். ஆஸ்திகத்தையும் உண்மைச் சைவத்தையும் பரப்புவதற்காக ஏனைய உயரிய பத்திரிகைகளோடும் அவற்றின் ஆசிரியன்மாரோடும் நாம் ஒத்துழைக்கத் தலைப்பட்ட நாள்முதல் "திராவிடன்" "குடியரசு" பத்திரிகைகட்கு நம்மீது அளவில்லாத அழுக்காறு உண்டா யிருக்கிறது. நாம் எழுதுவதற்குத் தகுந்த விடை பகர முடியாத நிலைமையில் வாயில் வந்தவாறெல்லாம் வசைபுராணம் பாடி நமது கட்டுரைகளை ஆராய்வது போலப் பாசாங்கு செய்வது அப்பத்திரிகைகளின் வழக்கமாய்விட்டது.

மேன்மேலும் வசை புராணம் வழங்குவதற்கு அப்பத்திரிகைகட்கு சமீபத்தில் ஒரு சாக்கு அகப்பட்டது. மணலி மாணவர் விடுதியை நாம்

பார்த்து வருகிறோம். சில மாதங்களாக அவ்விடுதியிலுள்ள பார்ப்பனரல்லாத மாணவர்கள் "திராவிடன்" "குடியரசு" பத்திரிகைகளைப் படிப்பதன் பலனைப் பார்ப்பன மாணவர்களைப் பெரிதும் உபத்திரவப் படுத்தி வருகின்றனர். சமீபத்தில் ஒரு பார்ப்பனரல்லா மாணவன் அவ்வாறு வீண் குறும்பு செய்ததற்காக அவனை நாம் தண்டிக்க நேர்ந்தது. இவ்வாறு இதற்கு முன்னர் பல குறும்புகள் செய்ததற்காகப் பல பார்ப்பன மாணவர்களையும் பார்ப்பனரல்லாத மாணவர்களையும் நாம் தண்டித்ததுண்டு. "திராவிடன்" "குடியரசு" பத்திரிகைகள் நம்மைத் தாக்கி ஒரு திங்களுக்கு மேலாய்விட்ட படியால் உடனே இந்த சாக்கை வைத்துப் "பார்ப்பன" பால சுப்பிரமணியத்தின் சைவக் குறும்பையும், சுயமரியாதை யின்மையையும், பேடித் தன்மையையும், இரக்க மின்மையையும், விலங்குத் தன்மையையும் விளக்கி ஆரவாரம் செய்துவிட்டன. இதனால் தமிழ்நாட்டில் வானளாவிய சுயமரியாதை சூரிய மண்டலத்தையும் எட்டியிருக்கும் என்று எண்ணுகிறோம்.

பொய்யுரைகளை எழுதி அவைகளைக் கொண்டு சுயமரியாதை இயக்கத்தைப் பரப்புவது இவ்விரு பத்திரிகைளின் இயல்பு என்பது அனைவரும் அறிந்த தொன்று. இப்பொய் யுரைகளை மறுத்து உண்மையை விளக்கும் மறுப்புரைகளை அப்பத்திரிகைகள் வெளியிடுவதில்லை என்பதும் அனைவரும் அறிந்த தொன்று. இப்பத்திரிகைகளில் வெளிவரும் பொய்களைக் கொண்டுதான் தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கத்தைப் பரப்ப இயலும் போலும்! இத்தகைப் பொய்ப் பிரசாரத்தின் பலனைத்தான் சுயமரியாதைத் தலைவரும் தாம் பிறந்து வளர்ந்து செல்வாக்கு பெற்றிருந்த ஈரோடை விட்டு விட்டுத் "தரும மிகு சென்னை" வந்துத் தஞ்சம் புகுந்தனர் போலும்! தமிழ்நாட்டைக்கனும் பேசித் திரிந்தவர் ஒரு மூலையில் உட்கார நேர்ந்தது போலும்! மந்திரிகள் ஆதரவின்றித் தமது "மகாநாடுகள்" பரிமளிக்க இடமில்லை போலும்! சுயமரியாதைத் தலைநகராகிய 'சென்னையின் கேவலம் ஒரு முனிசிபல் தேர்தலில் வெற்றிபெறத்தாம் சுயமரியாதைக்காரரல்லர் என்று ஓர் அபேக்ஷகர் எழுத்து மூலம் உறுதி கூறவேண்டுவது அவசியம் ஆயிற்று போலும்!

மாமிசத்தையுண்டு மந்திரி வழிபாடு செய்யும் சுயமரியாதை வீரர்கள் மாக்கறியுண்டு மகாதேவ தேவனை வழிபடும் சைவர்கட்கு இரக்கமில்லையென்று கூறுவது எள்ளி நகையாடுதற்கே யுரியது. தங்கள் முன்னேற்றத்துக்காகப் பதவி வேட்டையிற் சிறந்த பட்டதாரிகளை வழிபடுவோர் சைவர்களின் பேடித் தன்மையை விளக்குவது எம்மட்டில் பொருந்தும்? ஒரு தாலூகாபோர்டு ஜில்லா போர்டு தேர்தலில் எண்ணிறந்த அட்டூழியங்களைச் செய்யும் 'நீதி'யாளர்கள் சைவர்களின் நீதியின்மையை விளக்குவது எம்மட்டில் பொருந்தும்? இவ்வாறே நெடுக ஆராய்ந்து செல்லலாம்.

சுயமரியாதை இயக்கத்தால் இளைஞர்கட்கும் மாணவர்கட்கும் விளையும் தீங்குகளை இனியாவது நமது தமிழ் நாட்டினர் உணர்ந்து விரைவில் அத்தீங்குகளை ஒழிக்க முற்படுவர் என்று எண்ணுகிறோம். இவ் வியக்கத்தின் உயிர் முக்காற்பங்கு ஒடுங்கிவிட்டதெனினும், இறக்கும் புலி எய்தானைக் கவ்வுதல்போல் விடுதல்கூடாது. காற்பங்கையும் தொலைத்தல் வேண்டுமென்பது உண்மைச் சைவர்களுக்கு ஒத்த முடிபாகும். இஃது தற்போது சைவக் குறும்பாயின் ஆகுக. சைவப் பேரரும்பணியாகவே பிற்காலத்தவர் இதை எண்ணி நன்றி கூறுவரென்பதில் எட்டுணை ஐயமுமில்லை. உலகத்தில் அறியாமையும் இறுமாப்பும் உள்ளவரை அவற்றை யொழிக்க "சைவக்குறும்பு" நிலைத்திருக்கும்.

# மதிப்புரைகள்

**அப்பர் புகழ்மாலை** :—தொகுப்பாசிரியர் - திரு. நாராயணசாமி நாயுடு. இது மிகவும் அரிய நூல். நூறு வேறுபுத்தகங்களில் அப்பர் சுவாமிகளை வணக்கும் தோத்திரப்பாக்களையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து அமிர்தம்போலத் தருவது. இத்தகைய திருப்பணிசெய்ய இதுகாறும் யாரும் முன்வந்திலர். இவ்வாசிரியர் இஃதேபோல் ஏனைய சமய குரவர் புகழ் மாலைகளையும் விரைவில் தொகுத்து வெளியிடுவரெனச் சைவ உலகம் எதிர்பார்க்கிறது. விலை அணா நான்கு. இராயப்பேட்டை, முருகவேள் புத்தகசாலை; திருச்சிற்றம்பல இல்லம், கிழக்கு மருதூர், திருநாமநல்லூர் தபால், முதலிய விலாசங்களில் இந்நூல் கிடைக்கும்.

**ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்** :—ஆசிரியர் - இருக்கம் ஆதிமூல முதலியார். இவ்வாசிரியர் பல ஆண்டுகள் சைவத்துக்குத் தொண்டு புரிந்து மூப்படைந்தவர். இவர் இயற்றிய சம்வாதம் சைவ மாணவர்கட்குப் பெரிதும் பயன்படக் கூடியது. ஆத்திக புத்தியை இளமையில் திறம்பட வேரூன்றச் செய்வது. இந்நூலைப் பயில்வது ஆரம்பக் கல்வியில் இன்றியமையாத பகுதியாகக் கருதப்படுதல் நலம். 50 பிரதிகள் 1 ரூபா. வேண்டுவோர் 43, பாளையப்பன் தெரு, எழுகிணறு, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதுக.

**திருவருண்மாலை** :—பெரிய குளம் முருகப்பிரான்மீது மதுரை சுந்தரபாண்டிய ஓதுவா மூர்த்திகள் பாடியது. விலை அணா 2. கலியுக வரதனும் கந்தவேள்மீது பாடிய பாடல்கள் நாடோறும் மிகுந்து வருகின்றன. இப்பாடல்கள் அழகாகவும் பக்தியைப் பெருக்கும் தகையனவாகவும் உள்ளன.

**ஆரோக்கிய தீபிகை** :—சென்னையில் கனம் டாக்டர் யூ. ராமராவ், யூ. கிருஷ்ணராவ் அவர்களால் இப்பத்திரிகை தமிழிலும் ஆங்கிலத்திலும் மாதந்தோறும் மிக அழகாக வெளியிடப்பட்டு வருகிறது. வருட சந்தா ரூ. 1—8—0. மிக அழகான படங்களும் உடல்நலனுக்கான எளிய வழிகளும் நோய்வாராமல் காப்பதற்குரிய முறைகளும் இப்பத்திரிகையில் மிளிர்கின்றன. தமிழ் நாட்டினர் ஒவ்வொருவரும் ஓராண்டிற்கு 1—8—0 ரூபா கொடுத்துப் பத்திரிகையை வாங்கி வாசித்தால் அவ்வாண்டில் மருந்துக்கும் வைத்தியருக்கும் செலவாகக் கூடிய நூறு ரூபாயை மிகுதிப்படுத்தலாம்.

**யாதவ மித்திரன்** :—மதுரை கோபாலகிருஷ்ணக் கோனார் அவர்கள் பொறுப்பில் வெளிவரும் இப்புதினத் திங்கள்தாள் யாதவகுல முன்னேற்றத்தை நாடுவதோடு தமிழ்மொழியைப் பரப்பும் அரிய தொண்டுபுரிய முன் வந்துளது. இம்மித்திரன் சுயமரியாதைச் சுழலில் அகப்படாதவரை நீடூழி வாழும்.

---

# அறிக்கைகள்

(1) சைவ மடாதிபதிகளைக் கண்டு சைவத் தொண்டுகள் புரியும் சபைகட்குப் பொருள் பெறுதற்கு ஒரு குழுவாகத் தங்கள் சொந்தச் செலவில் செல்ல விரும்புவோர் தங்கள் விலாசங்களையும் சௌகரியமான தேதிகளையும் உடனே தெரிவிக்க வேண்டுகிறேன்.

(2) திருவாளர் பொ. முத்தையா பிள்ளையவர்கள் வெளியிட்ட தலைமைப்பேருரை ஆராய்ச்சியினிறுதியில் நாம் "விரைந்தோடும் தேரின்முன் முட்டுக்கட்டை நில்லாது" என்றெழுதிய குறிப்பைப் பீடமாகக்கொண்டு திரு. பிள்ளையவர்கள் ஒரு கடிதம் அனுப்பினார்கள். அதில் விரைந்தோடும் தேர் விழுந்து நொறுங்கும் என்றும், சீர்திருத்தம் செய்யும் உண்மைச் சைவர்கள் காகங்கள் என்றும், கல்லின்முன் நில்லாவென்றும் சமணரைச் சம்பந்தர் வென்றதுபோல் இவ்வுண்மைச் சைவர்களை, தொகை சுருங்கிய தங்கள் குழுவினரோ இறுதியில் வெல்வார்களென்றும் பலவாறாக எழுதியுள்ளார்கள். இக்கட்டுரை, அறிஞர் மனதைப் புண்படுத்தும் தகையது என்று அதனை வெளியிடாது விடுத்தோம்.—[பத்திராசிரியர்.]

இங்ஙனம்:

10-9-29

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி, சைவசித்தாந்த மகா சமாஜம்.

...மறந்துங்கள்! விலை ரூ. 2-12-0 தான். ரூ. 2-12-0 தான்.

130 சாமான்கள் அடங்கிய ஜர்மன் பெட்டி

சாமான்களின் விவரம் :—14 காரட் ரோல்டு கோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன்



பேனா, ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2, ஷை சர்ட் பொத்தான்கள் செட் 12, ஷை கல்லிழைத்த புரூச் 1, ஜப்பான் நூதன ...பொம்மைகள் 6, கூர்த்தியான கத்தி 1, காமினேஷன் நூதன, சாவி வளையமும் செயினும் 1, ...யர்ந்த பென்சல்கள் 12, பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1, பலரகப் பென் ஹோல்டர்... 6, உயர்ந்த நிப்புகள் 12, மணிபர்ஸ் 1, ஜெர்மன் இங்கி புட்டி 1, இங்கி மாத்திரைகள் 12, ...சென்ட் புட்டி 1, தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 35, அழகிய பலரக சேப்டி பின்கள் 25 ஆக 130 சமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி 1-க்கு விலை ரூபா 2-12-0 தான்.

ஜீனன் வாட்சு கம்பேனி, மிண்டு பில்டிங் மதராஸ்.



விலை ரூ. 2-14-0 விலை ரூ. 2-14-0

## நூதன கைத் தையல் மெஷின்

மேலே கண்ட விலை எமது அசல் விலை. சிலநாட்களுக்கு மட்டுமே இந்த விலைக்குக் கொடுக்கப்படும்.

இந்த மெஷின் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மெஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால், மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும், மல் துணியிலும், புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச்செய்யலாம். விலை 1-க்கு ரூ. 2-14-0. திருப்தி யில்லாவிடில் பணம் வாபீஸ்.

கனடியன் வாட்சு பீபிள், ஸோல் ஏஜண்ட்ஸ், ஜார்ஜ் டவுன், மதராஸ்.

கண்கவரும் உயர்ந்த பதிப்பு! வெளிவந்து விட்டது!

## மூவர் தேவாரம் (பண்முறை)

திருமுறை யாராய்ச்சியில் வல்ல

க. சதாசிவ செட்டியார் அவர்கள் பார்வையிட்டது

| | | கலிக்கா | | | | ரெக்சின் or பட்டு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சம்பந்தர் தேவாரம் | ரூ. | 7 | 8 | 0 | ரூ. | 8 | 0 | 0 |
| அப்பர் தேவாரம் | ,, | 6 | 8 | 0 | ,, | 7 | 0 | 0 |
| சுந்தரர் தேவாரம் | ,, | 3 | 0 | 0 | ,, | 3 | 8 | 0 |
| மூவர் தேவாரம் முழுதும் | ,, | 15 | 0 | 0 | ,, | 16 | 8 | 0 |

குறிப்பு:—இதன்கண் பதிக வரலாறு, பதிக அட்டவணை, தல அட்டவணை, அருஞ்சொற் பொருள் விளக்கம், பாட்டு முதற்குறிப்பகராதி, ஆசிரியர் திருவுருவப் படங்கள், அற்புதப் படங்கள் முதலியன அடங்கியன.

| | | | | |
|---|---|---|---|---|
| அகத்தியர் தேவாரத் திரட்டு மூலமும் உரையும். 2-வது பதிப்பு வெளிவந்து விட்டது. அழகிய கலிக்காக் கட்டடம். | ரூ. | 1 | 12 | 0 |
| நால்வர் தாலாட்டு. (திருவுருவப் படங்களுடன்) | ,, | 0 | 3 | 0 |
| சிவஞானசுவாமிகள் வசனப் பிரபந்தத்திரட்டு | ,, | 1 | 12 | 0 |
| ,, செய்யுட் பிரபந்தத்திரட்டு | ,, | 2 | 4 | 0 |
| பிள்ளைத் தமிழ்க் கொத்து (6 பிள்ளைத் தமிழ் நூல்கள்) | ,, | 3 | 0 | 0 |
| முருகன் புகழ்மாலை 2-வது பதிப்பு | ,, | 3 | 0 | 0 |
| திருக்குறள் பொழிப்புரை கலிக்கா | ,, | 1 | 4 | 0 |

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக லிமிடெட்,

6, பவளக்காரத்தெரு, சென்னை.



...inted at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.